இதழ் 371
27 டிசம்பர் 2025
19 பக்கங்கள்

# இலக்கு

வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER
youtube.com/@IlakkuWeb2.0
facebook.com/ilakku.ilakku.10
twitter.com/Ilakku1














© 2025 இலக்கு இணையம்

## இலங்கைக்கான இந்தியாவின் கொள்கை தொடர்பில் ஜெய்சங்கர் விளக்கம்



இந்தியாவின் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கையை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் எடுத்துரைத்துள்ளார்.

இலங்கைக்குக் கடந்த திங்கட்கிழமை வருகைதந்திருந்தஅவர், நாட்டின் உயர் மட்ட பிரமுகர்களை சந்தித்தப்பின்னர் இந்தியாவுக்குத் திரும்பினார். இந்த பயணம் தொடர்பில் தனது எக்ஸ் பதிவில் கருத்துக்களை பகிர்ந்துகொண்ட எஸ்.ஜெய்சங்கர், இலங்கைக்கான முன்னுரிமை தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளார்.

அதில் டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவிற்குப் பின்னர் இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதில் இந்தியாவின் ஆதரவை மீண்டும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வை மஹாசாகர் திட்டத்தின் கீழ், சூறாவளியால் பெரும் பேரழிவில் சிக்கிய இலங்கைக்கு உதவ ஒபரேஷன் சாகர் பந்து ஆரம்பிக்கப்பட்டதாக ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

தமது இலங்கை பயணத்தின் போது, டித்வா சூறாவளிக்குப் பிறகு

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## BNP தலைவர் ரஹ்மான் மீண்டும் வருகிறார்

### வங்கதேசத்தின் அடுத்த பிரதமர்?



17 ஆண்டுகள் நாடுகடத்தப்பட்ட பிறகு, வங்காளதேச தேசியவாதக் கட்சியின் (BNP) தலைவரும், தெற்காசிய நாட்டின் அடுத்த பிரதமராக வருவதற்கான முன்னணி வேட்பாளருமான தாரிக் ரஹ்மான் வியாழக்கிழமை டாக்கா திரும்பினார், அவருக்கு ஆயிரக்கணக்கான அவரது கட்சி ஆதரவாளர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

வங்காளதேச அரசியலின் இளவரசராக நீண்டகாலமாக கருதப்படும் ரஹ்மான், டாக்காவில் உள்ள ஹஸ்ரத் ஷாஜலால் சர்வதேச விமான நிலையத்தில் தனது மனைவி ஜுபைதா மற்றும் மகள் ஜைமாவுடன் இறங்கி, பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வங்காளதேச மண்ணில் வெறுங்காலுடன் நின்றார்.

ரஹ்மானின் நாடு திரும்பல், நாட்டின் அரசியலில் ஒரு முக்கியமான கட்டத்தில் வருகின்றன, மேலும் இது வங்கதேச தேசியக் கட்சித் தொண்டர்கள் மற்றும் தலைவர்களுக்கு ஒரு பெரிய அடியைக் குறிக்கிறது. மாணவர் தலைமையிலான எழுச்சியில்

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

## முல்லைத்தீவு மாவட்டத்தில் 3,389 குடும்பங்களுக்கு வாழ்வதற்குரிய காணி இல்லை!

முல்லைத்தீவு மாவட்டத்தில் 3,389 குடும்பங்களுக்கு வாழ்வதற்குரிய காணி இல்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டங்களின் போது, பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இந்த விடயம் தொடர்பில் பிரதேச செயலாளர்களிடம் கேள்விகளை முன்வைத்துள்ளார்.

அதன்படி, எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் காணிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேச செயலாளர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தநிலையில் இறுதியாக நடைபெற்ற கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்தின் போது, குறித்த பிரதேசத்திலும்



700 குடும்பங்கள் காணிகள் இன்றி வாழ்வதாக பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.


மக்கள் நிம்மதியாக வாழ்வதற்குரிய காணிகள் பெற்றுக் கொடுக்கப்படாவிடின், பிரதேச செயலகங்களை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அதிகாரிகளிடம், பாராளுமன்ற உறுப்பினர்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## இஸ்ரேலிய சிறைகளில் 'சித்திரவதை, பட்டினி'யை எதிர்கொள்ளும் பாலஸ்தீன கைதிகள்

இஸ்ரேலிய சிறைகளில், 9,300க்கும் மேற்பட்ட பாலஸ்தீன கைதிகள் "சித்திரவதை, பட்டினி, மருத்துவ புறக்கணிப்பு மற்றும் மெதுவான மரணதண்டனைகளை" எதிர்கொள்கின்றனர் என்று பாலஸ்தீன கைதிகள் ஊடக அலுவலகம் (ASRA) தெரிவித்துள்ளது.

அக்டோபர் 2023 இல் காசா மீதான இஸ்ரேலின் இனப்படுகொலைப் போர் தொடங்கியதிலிருந்து, சிறையில் உள்ள பாலஸ்தீனியர்கள் "அதிக சித்திரவதை மற்றும் அடக்கு முறையின் அதிகரிப்புக்களை" அனுபவித்துள்



ளனர் என்று கைதிகள் குழு தெரிவித்துள்ளது.

கடுமையான அடி, கண்ணீர்ப் புகை, மின்சார அதிர்ச்சி, ரப்பர் தோட்டாக்கள், போலீஸ் நாய்கள்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## சுனாமி ஆழிப்பேரலை பேரழிவு ஏற்பட்டு 21 ஆண்டுகள்

சுனாமி ஆழிப்பேரலை பேரழிவு ஏற்பட்டு இன்றுடன் (26) 21 ஆண்டுகள் நிறைவடைகின்றன.



26 டிசம்பர் 2004 அன்று இந்தோனேசியாவின் சுமத்ரா தீவு அருகே ஆழ்கடலில் ஏற்பட்ட நில அதிர்வு காரணமாக எழுந்த பேரலைகள் இலங்கை, இந்தியா, தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, உள்ளிட்ட பல நாடுகளில் பேரழிவை ஏற்படுத்தின.

கரையோர மக்களைப் பொறுத்தவரையில் அலைகள் ஒன்றும் புதிதல்ல. அதனால் அன்று வந்த அலையையும் சாதாரணமாகவே நினைத்தனர். எனினும், அந்த அலை, ஆயிரக்கணக்கான மக்களின் உயிரைக் காவுகொள்ளும் என எவரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். இதில் சுமார் 14 நாடுகளுக்கு மேல் பாதிக்கப்பட்டன. இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர்.

அன்று முதல் இன்றுவரை 21வருடங்கள் ஆகின்றபோதிலும் டிசம்பர் மாதம் 26ஆம் திகதி மறக்க முடியாத நாளாக அனைவரின் மனதிலும் உள்ளது.

இதன்விளைவு இலங்கையிலும் பாரியளவு பாதிப்பு ஏற்பட்டது. 35,000க்கும் மேற்பட்டோரின் உயிர்கள் பறிக்கப்பட்டன.

5,000க்கும் மேற்பட்டோர் காணாமல் போயினர், பில்லியன் கணக்கான மதிப்புள்ள சொத்துக்களும் அழிந்தன.

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் போரை தூண்டும் அமெரிக்கா



சீனாவிற்கும் பிற நாடுகளுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்தவும், இந்தியாவுடனான தனது உறவுகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தவும் அமெரிக்கா முயற்சிப்பதாக பெய்ஜிங் வியாழக்கிழமை(25) குற்றம் சாட்டியுள்ளது.

இந்தியாவுடனான உறவுகள் குறித்த சமீபத்திய பென்டகன் அறிக்கையைக் குறிப்பிட்டு, அமெரிக்காவின் அணுகுமுறையை "பொறுப்பற்றது" என்று சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் லின் ஜியான் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

## சந்திரனில் மின் நிலையத்தைத் தொடங்க ரஸ்யா திட்டம்

ரஷ்யா ஒரு தசாப்தத்திற்குள் சந்திரனில் ஒரு மின் நிலையத்தைத் தொடங்க திட்டமிட்டுள்ளது என்று விண்வெளி நிறுவனமான ரோஸ்கோஸ்மோஸ் அறிவித்துள்ளது, நாட்டின் முன்னணி விண்வெளி மற்றும் கிரக பயணங்களை உருவாக்கும் நிறுவனமான NPO லாவோச்கினுடன் 2036 வரை இந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்காக ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாகக் கூறியுள்ளது.




இந்த வசதியின் நோக்கம் சந்திர ரோவர்கள் மற்றும் ஒரு ஆய்வகம் மற்றும் சீனா தலை

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# முள்ளிவாய்க்கால் இனவழிப்புக்கான நீதி

## முள்ளிவாய்க்கால் இனவழிப்புக்கு நீதியும், ஈழத்தமிழர் தேசிய இனச் சிக்கலுக்கான அரசியல் தீர்வும் அடிப்படைக் கோரிக்கைகள்! ஒன்றிலிருந்தொன்று பிரிக்க முடியாதவை!

***ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு அறிக்கை***

*கடந்த திசம்பர் 18ஆம் நாள் தமிழீழத் தாயகத்திலிருந்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் திரு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட குழுவினர் சென்னை வந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு. க. ஸ்டாலினை நேரில் சந்தித்து ஈழத் தமிழருக்கான அரசியல் தீர்வு குறித்தும் மீனவர் சிக்கலுக்கான தீர்வு குறித்தும் இரு கோரிக்கை மனுக்களைக் கொடுத்துள்ளனர். மேலும் தமிழ்நாட்டு அரசியல் கட்சித் தலைவர்கள் சிலரையும் சந்தித்துத் தங்கள் கோரிக்கைகளுக்கு ஆதரவு திரட்டியுள்ளனர்.*



*இக்குழுவினரின் வருகையும், தமிழ்நாடு அரசிடமும் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளிடமும் தமிழீழத்தின் நிலைமையை விளக்கி, ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவு திரட்டும் முயற்சியும் வரவேற்புக் குரியவை.*

*ஈழத் தமிழருக்கான அரசியல் தீர்வு குறித்த கோரிக்கை விண்ணப்பத்தில் சிறிலங்காவின் ஒற்றை யாட்சி அரசமைப்பை மாற்றி, தேசிய சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான கூட்டாட்சித் தீர்வை இந்திய அரசு வலியுறுத்தத் தமிழ்நாட்டரசு அழுத்தம் கொடுக்கக் கோருவதும், இந்திய-இலங்கை உடன்படிக்கையின் படியான 13 ஆவது சட்டத்திருத்தம் தோல்வி அடைந்த தற்கான காரணங்களை விளக்குவதும் சரியானது.*

*கூட்டாட்சி கேட்பது தமிழீழக் கோரிக்கை யைக்கைவிடுவதாகத்தான் இருக்க வேண்டும் என்ப தில்லை. ஆனால் முள்ளிவாய்க்காலில் உச்சம் கண்ட இனவழிப்புக்குப் பன்னாட்டுப் புலனாய்வின் வழி நீதி கோராமல் கூட்டாட்சி உட்பட எந்த அரசியல் தீர்வை முன்வைத்தாலும் உருப்படியான முன்னேற்றம் காண இயலாது எனக் கருதுகிறோம். நீதிக்கான போராட்டத்தில் தமிழ்நாடு அரசு முனைப்புக் காட்டி இந்திய அரசின் நிலைப்பாட்டை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை அரசியல் தீர்வுக்கான கோரிக் கைக்கு முன்னதாக வலியுறுத்த வேண்டும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.*

*திரு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குழுவி னர் தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு அளித்த விண்ணப் பத்தில் இனவழிப்புக்கு ஈடுசெய் நீதி என்ற கோரிக்கை இடம்பெறவே இல்லை என்பதை ஒரு பெருங்குறை யாகக் கருதுகிறோம்.*

*இனவழிப்புக்குக் குற்றவியல் நீதி என்ற அடிப்படையில் பன்னாட்டுப் புலனாய்வு, பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் இனவழிப்பு உள்ளிட்ட குற்றங்களுக்கு வழக்காடல் உள்ளிட்ட கோரிக்கைகளும், தமிழீழத் தேசத்தின் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் பொதுவாக்கெடுப்புக் கோருவதும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாத இன்றியமையாக் கோரிக்கைகளாகும். இந்தியா உள்ளிட்ட வல்லரசுகள் முள்ளிவாய்க்கால் இனவழிப்பை அறிந்தேற்க மறுத்துவரும் நிலையில் இனவழிப்புக்கு நீதி வேண்டும் என்பதைத் தவறாமல் இந்திய அரசிடமும் தமிழ்நாட்டரசிடமும் முன்வைக்க வேண்டும் எனக் கருதுகிறோம்.*

*இந்தக் கோரிக்கைகளின் வெற்றிக்குத்*

*தொடர்ச்சி 18ஆம் பக்கம்*

# இலக்கு

## ஈழத்தமிழர் இறைமையை மீளுறுதிசெய்ய வட்டுக்கோட்டைத் தீர்மானம் பிறப்பிக்கப்பட்ட பொன்விழா ஆண்டாக மலரும் 2026

அனைவருக்கும் 2026ம் ஆண்டு பாதுகாப்புடன் கூடிய அமைதியையும் வளர்ச்சிகளையும் பெற அவர்கள் உழைக்கும் ஆண்டாக மலர இலக்கு ஆசிரியக்குழு முதலில் வாழ்த்துகிறது.

உலகத்தைப் பொறுத்த மட்டில் 2026ம் ஆண்டு பிறக்கும் பொழுது பன்முனைவாக்கம் கொண்ட புதிய உலக அரசியல் முறைமையையே நடைமுறையாகியுள்ள நிலையில் இந்த முனைவாக்கச் சிதறல் முரண்பாடுகளையும் வல்லாண் மைகளின் பேராசைகளையும் பெருகவைத்துப் புதிய காலத்தை பாதுகாப்பின்மையை அனுபவிக்க வைக்கும் காலமாகப் பிறக்க வைத்துள்ளது. ஒஸ்லோவில் உள்ள அமைதிக்கான ஆய்வு நிறுவனம் 1946ம் ஆண்டில் இருந்ததை விட 2024இல் என்று மில்லாத அளவுக்கு அரசுசார்ந்த முரண்பாடுகள் அதிகரித்துள்ளன என ஆய்வு செய்துள்ளது. ஒக்டோபர் காசா அமைதிப் பிரகடனம் அங்கு பகுதியளவில் நிவாரணங்களை வழங்கும் என அறிவித்த போதிலும் உடலைப்பாதுகாக்க ஆடைகள், தங்கிடங்கள், உணவுகள், மருத்துவம் வைத்திய முறைமைகள் எதுவுமின்றி மாரிக்குளிரில் சித்திரவதையினை அனுபவிக்கும் மக்களாகவே அங்குள்ள சிறுவர்கள் முதல் முதியவர் வரை மரணத்துடன் போராடும் பரிதாபத்தை உலகம் கண்டு இரசித்துக் கொண்டிருக்கிறது.

உக்ரேனில் ரஸ்ய எல்லைப்பகுதிகளில் இராணுவத்தை விலக்கி முக்கிய அணுவுலைகளை மற்றும் கனிமவளப் பிரதேசங்களை ரஸ்ய உக்ரேன் கூட்டு முகாமைத்துவத்தில் முன்னெடுக்க வல்ல 20 அம்ச அமைதிக்கான முன்மொழிவொன்றை அமெரிக்க ஐரோப்பிய அழுத்தங்களுக்கு வளைந்து கொடுத்து உக்ரேன் சனாதிபதி வெளியிட்டுள்ள நிலை காணப்படுகிறது. சூடானில், அவுஸ்திரேலிய பொன்டி கடற்கரையில், எனப் பலநாடுகளில் பலநிகழ்வுகளில் மனிதாயம் கண்முன்னால் சாகடிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் நேரத்திலேயே புதிய ஆண்டு பிறக்கிறது.

ஐரோப்பாவில் 1980ம் ஆண்டு காலப் பனிப்போரின் பின்னர் ரஸ்யாவின் புதிய தொழில்நுட்ப புனரமைப்புடனான கலப்புப் போர்முறையால் " நிச்சயமற்றதன்மையின் காலம்" கட்டமைக்கப்பட்டு வருவதை பிரித்தானியாவின் எம்16இன் தலைவி பிளய்சி மெட்ரிவெளி அவர்களது கன்னியுரை சுட்டிக்காட்டியுள்ளது. அதே நேரத்தில் நேட்டோவின் செயலாளர் நாயகம் மார்க் ரூட்டி அவர்கள் ரஸ்யா ஐந்து வருடத்துக்குள் ஐரோப்பாவைத் தாக்கும் என்று எச்சரிப்பை அவரது ஆண்டிறுதி உரையில் எடுத்துரைத்துள்ளார். ஆயினும் மனித எதிர்காலம் வளமாக இருக்கும் என்னும் நம்பிக்கையை தன்னலமற்ற முறையில் பொன்டிக் கடற்கரைத் தாக்குதலை நடத்தியவரை வெறுங்கையுடன் எதிர்கொண்டு போராடி மக்களைப் பாதுகாத்த பொரிஸ் சோவ்வியா குருமன் என்ற யூதத் தம்பதியினரும், அகமட்- அல்- அகமட் என்ற முஸ்லீம் பெருமகனும் உலகுக்கு அளித்துள்ளனர்.

இவற்றை தனது கிறிஸ்மஸ் பருவகாலம் என்கின்ற புத்தாண்டுக்கு முன்னான காலம் குறித்து பிரித்தானியாவின் ஆங்கில நாளிதழான "த கார்டியன்" தனது ஆசிரியப் பார்வையில் " பாதிப்புற்றுள்ள உலகம் அமைதியை நம்பிக்கையை நல்லெண்ணத்தை தரவல்ல செய்திகளே உலகுக்குத் தேவையாக உள்ளது" என்ற படைப்பில் சுட்டிக்காட்டியுள்ளது. "எங்களுக்கு நம்பிக்கை கொள்வதற்கான உரிமையுள்ளதா? ஏன்று கிறிஸ்தவ இறையியலாளரும் தத்துவாசிரியருமான போல் டிலிச் அவர்கள் ஹவார்ட் பார்வையாளர்களிடை எழுப்பிய கேள்வியுடன் தொடங்கிய இந்த ஆசிரியப் பார்வை "யாருமே நம்பிக்கையற்றவர்களாக வாழ இயலாது. துன்பமான ஒடுக்கமான பாதைகளின் வழி வாழ்வு பயணிப்பதாக இருந்தபோதிலும் அதனைத் துணிவாக எதிர்கொண்டு வாழ வேண்டும்" என்கிற கருத்தை இந்த ஆய்வு பதிவிட்டுள்ளது. இதனையே இலக்கும் தனது எதிர்வரும் ஆண்டுக்கான எண்ணமாகப் பதிவிட விரும்புகிறது.

ஈழத்தமிழரைப் பொறுத்த மட்டில் 2026ம் ஆண்டு ஈழத்தமிழர் இறைமையை மீளுறுதி செய்ய வட்டுக்கோட்டைத் தீர்மானம் பிறப்பிக்கப்பட்ட பொன்விழா ஆண்டாக மலருகிறது. இந்நேரத்தில் இந்த வட்டுக்கோட்டைத் தீர்மானம் அடுத்த ஆண்டிலேயே 1977இல் மக்களாணையைப் பெற்றுவிட்ட போதிலும் கடந்த 50 ஆண்டுகளில் 1978க்கும் 2009க்கும் இடைப்பட்ட 31 ஆண்டுகளில் ஈழத்தமிழர்கள் கட்டமைத்த தமிழீழ அரசு என்னும் நடைமுறையரசுக்காலத்தை விட ஏனைய 19 ஆண்டுகளும் ஈழத்தமிழரின் பாராளுமன்ற அரசியல் கட்சிகளின் கையாலாகாத் தனத்தையே இதனை நடைமுறைப்படுத்துவதில் உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளது என்பது வரலாறாக உள்ளது.

இதற்கான முதற்காரணம் 1977 பொதுத்தேர்தலில் வெற்றி பெறும் தமிழ்ப்பிரதிநிதிகள் சிலோனின் தேசிய அரச சபைக்குச் செல்லாது தமிழீழத்தின் சுதந்திரத்தை உறுதி செய்வதற்கான தமிழீழ தேசிய அரசசபையை அமைத்து அதன் அரசியலமைப்பை அமைதி வழியிலோ அல்லது நேரடியான செயல்கள் வழியாகவோ அல்லது போராட்டத்தின் வழியாகவோ நடைமுறைப்படுத்துவோம்" என்றே தமிழர் விடுதலைக்கூட்டணியினர் தமது தேர்தல் கொள்கைத் திரட்டில் அளித்த வாக்குறுதியைத் தேர்தல் வெற்றியின் பின்னர் நிறைவேற்றாமையே என்பதாக உள்ளது.

இன்று 50 ஆண்டுகள் சென்ற நிலையிலும் 1976ம் ஆண்டின் வட்டுக்கோட்டைத் தீர்மானம் 1977ம் ஆண்டின் மக்கள் குடியொப்பத்தின் வழி மீளவும் ஒரு சுதந்திரமான மக்கள் குடியொப்பத்தின் மூலமே அதனை மாற்ற முடியும் என்கின்ற வரலாற்று உண்மையை இன்றைய ஈழத்தமிழ் அரசியல்வாதிகளே மறுத்து அல்லது மறைத்து அல்லது மறந்து செயற்படுகின்றனர். இன்று ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் சிறிலங்காவின் ஏக்கிய இராஜ்ஜிய புதிய அரசியலமைப்பில் ஈழத்தமிழர் என்னும் இறைமையும் தன்னாதிக்கமுள்ள தேச இனத்தைச் சமுகமென்றாக்கி அந்தச் சமுகம் சிங்கள பௌத்த நாட்டில் சிங்கள தேசத்தின் வடக்கில் கிழக்கில் வாழும் சிங்கள அரசால் சலுகைகள் அளிக்கப்பட வேண்டிய சமுகமாக வாழ வைக்க முயற்சிக்கின்றனர்.

இதனை தாங்கள் தடுப்பதற்கு இந்திய மத்திய அரசின் உதவியைக் கோர வேண்டும் என்கின்ற தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் இதற்காகத் தமிழக மாநில அரசின் உதவியையையும் அங்கு சென்று கோரினர். ஆனால் இந்திய வெளிவிவகார அமைச்சர் முனைவர் ஜெய்சங்கர் அவர்களின் கடந்த வார இலங்கை வருகையின் பொழுது கொழும்பு இந்தியத்தூதரகத்தில் அவரைச் சந்தித்த ஈழத்து அரசியல் வாதிகள் யாருமே ஈழத்தமிழரின் தேசிய பிரச்சினைக்கு வட்டுக்கோட்டைத் தீர்மான அடிப்படையில் தீர்வினைக் கோராது, 1978 முதல்இதுவரை ஈழத்தமிழர்களுக்கான தன்மான வாழ்வை எவ்விதத்திலும் ஏற்படுத்தாத தாளில் வெற்றுச் சட்டமாக உள்ள சிறிலங்காவின் அரசியலமைப்பின் 13 வது சட்டத்தை நடைமுறப்படுத்தி மாகாணசபை தேர்தலை நடாத்தும்படி மட்டுமே கோரியுள்ளனர்.

இது சிறிலங்காவின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியலமைப்பை அதற்கு ஏற்றமாதிரி கட்டமைப்பதற்கான கால அவகாசத்தை அளிப்பதற்கான ஈழத்தமிழ் அரசியல்வாதிகளின் தந்திரோபாய செயற்பாடென்றே இலக்கு கருதுகிறது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் தமிழகத்திலும் இறைமையுடன் கூடிய சமஸ்டி என்பதையே கோரினர் வெளிவிவகார அமைச்சரிடம் அதனை ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் கோரவில்லையெனக் கண்டனமும் தெரிவித்துள்ளனர். இது ஆரோக்கியமான ஒன்றாக இருப்பினும் இறைமையுடன் கூடிய சமஸ்டி என்பது குறித்து அவர்கள் தெளிவாக்க வேண்டிய தேவை உள்ளது என்பதை இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

அதே வேளை இலங்கையில் சீர்குலைந்து வரும் சிறுபான்மையின அரசியல் போக்குத் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியின் கீழ் " சர்வதேச சிறுபான்மையினக்குழு" வினர் வெளியிட்டுள்ள 50 பக்க ஆய்வறிக்கையில் 13வது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுதலையே புதிய அரசியலமைப்புக்கான அவர்களின் முன்மொழிவாக அமைத்துள்ளனர். ஈழத்தமிழர்களின் இறைமை நீக்கத்தைத் தொடர்ந்து அவர்களின் தேசிய நீக்கத்தை பலவழிகளில் பலரும் முன்னெடுப்பதற்கு இந்த அறிக்கையும் சான்றாகிறது.

இந்நிலையில் ஈழத்தமிழரின் அரசியல் எதார்த்தம் குறித்த அறிவூட்டல் 2026ம் ஆண்டுக்கான முதன்மைத் தேவையாகிறது. இதனை மாநாடுகள் கருத்தரங்குகள் வழியாக ஈழத்தமிழர் தாயகத்திலும் உலகெங்கும் செய்விக்க வேண்டிய பொறுப்பு உலகத் தமிழினமாகவுள்ள ஈழத்தமிழர்களுக்கு உண்டு என்பதையே 2026ம் ஆண்டுக்கான செய்தியாக இலக்கு இவ்வாரத்தில் முன்வைக்க விரும்புகிறது. தமிழகத்தில் 2026 சட்டசபைத் தேர்தல ஆண்டாக இருப்பதால் அங்கும் அதற்கேற்றவகையில் கருத்தரங்குகள் காலத்தின் கட்டாயமாகிறது. அடுத்து செயற்திட்டங்கள் அதற்கான செயலணிகள் உருவாக்கத்தின் வழியாகவே ஈழத்தமிழரின் சிதைந்து போன ஒருமைப்பாட்டை மீள்கட்டமைக்க வேண்டும் என்பதையும் இலக்கு மீளவும் பதிவுசெய்ய விரும்புகிறது.

**ஆசிரியர்**

கட்டுரை



# இந்தியாவின் இராஜதந்திர தற்காப்பு நடவடிக்கை

விதுரன்

இலங்கையில் ஏற்பட்ட மோசமான அனர்த்தத்திற்குப் பின்னரான பேரிடர் மீட்பு மற்றும் மீள்கட்டுமானப் பணிகள், தெற்காசியப் பிராந்திய வல்லரசுகளான இந்தியா மற்றும் சீனாவுக்கிடையிலான பூகோள அரசியல் போட்டியின் ஒரு முக்கிய களமாக மாறியிருக்கிறது.

குறிப்பாக, சீனத் தூதுக்குழுக்களின் தொடர்ச் சியான வருகையும், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கத்தின் ஆரம்பகால நகர்வுகளும் டில்லியை கடுமையான விழிப்புடன் இருக்கச் செய்துள்ளன.




சீனாவின் உயர்மட்டக் குழுக்கள் அடுத்தடுத்து மூன்று முறை இலங்கைக்கு விஜயம் செய்து, உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப உதவிகள் குறித்துப் பேசியிருந்த நிலையில், சீன மக்கள் குடியரசின் தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுத் தலைவரான ஜாவோ லெஜியின் வருகைக்கான உயர்மட்டத் திட்டமிடல்களும் முன்னெடுக்கப்பட்டன.

இந்தச் சூழலில், இலங்கையின் மீதான தனது கேந்திரப் பிடியைத் தளரவிடக்கூடாது என்பதற்காகவும், தனது செல்வாக்கு மண்டலத்திற்குள் சீனாவின் ஊடுருவலைத் தடுக்கவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் எவ்வித முன்னறிவிப்புமின்றி, திட்டமிடப்படாத அவசர விஜயத்தை மேற்கொண்டு கடந்த 22ஆம் திகதி மாலை கொழும்பில் கால்பதித்திருந்தார்.




இந்தத் திடீர் விஜயத்திற்குப் பின்னணியில் மற்றொரு முக்கிய காரணியும் இருந்தது. தமிழ்த்தேசியப் பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அண்மைக் கால தமிழக விஜயம் மற்றும் அங்கு அவர் ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு எதிராகத் திரட்டிய ஆதரவு, இந்தியத் தலைமைக்கு ஒருவித அரசியல் அசௌகரியத்தையும் ஒவ்வாமையையும் ஏற்படுத்தியிருந்தது.




தாயகத் தமிழர் விவகாரத்தில் இந்தியாவின் மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டைத் தாண்டி, தமிழகத்தின் ஊடாக அழுத்தம் கொடுக்கும் கஜேந்திரகுமாரின் நகர்வுகளைச் நீர்த்துப்போகச் செய்யவும், தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் மற்றும் பிராந்திய பாதுகாப்பு விவகாரங்களில் டில்லியின் வகிபாகமே முதன்மையானது என்பதை உறுதிப்படுத்தவும் ஜெய்சங்கர் துருப்புச் சீட்டாக பயன்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த 23ஆம் திகதி மாலை கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பில், தமிழரசுக்கட்சி, ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஆகிய மூன்று முக்கிய அணிகளின் பிரதிநிதிகளும் ஒரே மேசையில் ஜெய்சங்கரைச் சந்தித்தது இராஜதந்திர ரீதியில் மிக முக்கியமானதாகப் பார்க்கப்பட்டது.



வழக்கமாக இவ்வாறான சந்திப்புகளில் ஜெய்சங்கர் மிகவும் இறுக்கமான முகத்துடனும், உணர்ச்சிகளை வெளிப்படுத்தாத ஒரு கறாரான இராஜதந்திரியாகவுமே காட்சியளிப்பார். ஆனால் இம்முறை 'தித்வா' சூறாவளியினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு 450 மில்லியன் டொலர்கள் என்ற பாரிய உதவிப் பொதியுடன் வந்திருந்த அவர், தமிழ்ப் பிரதிநிதிகளுடன் மிகவும் தளர்வாகவும், சகஜமாகவும் உரையாடினார்.

குறிப்பாக, செல்வம் அடைக்கலநாதனின் மீசை குறித்து நகைச்சுவையாகக் குறிப்பிட்டது முதல், பிரதிநிதிகளின் ஒவ்வொரு கேள்விக்கும் விரிவாகப் பதிலளித்தது வரை அவரது அணுகுமுறையில் கணிசமான நெகிழ்வுத்தன்மை தெரிந்தது.

இச்சந்திப்பின் போது பலாலி விமான நிலைய அபிவிருத்தி குறித்து நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. பலாலி விமான நிலையத்தை இலாபகரமானதாக மாற்றுவதற்கு வெறும் ஓடுதள விரிவாக்கம் மட்டும் போதாது என்பதைச் சுட்டிக்காட்டிய அவர், மத்தள விமான நிலையத்தினால் எவ்விதப் பயனுமில்லை என்பதை வெளிப்படையாகவே விமர்சித்தார்.

அதேநேரம், காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திப் பணிகள் இந்தியாவின் நிதியுதவியுடன் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்ற நம்பிக்கையை அவர் ஊட்டினார். அவர் வெளிப்படுத்திய நம்பிக்கையானது அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடமிருந்து அந்த அமைச்சு பிடுங்கி மாற்றப்பட்டமைக்கான காரணத்தையும் உறுதிப்படுத்தியுள்ளது.



இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை குறித்துப் பேசப்பட்டபோது, யாழ்ப்பாண இந்தியத் தூதரகத்திற்கு முன்னால் நடத்தப்பட்ட போராட்டத்தின் பின்னணியில் 'தேசிய மக்கள் சக்தி' இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தை சுரேஷ் பிரேமசந்திரன் உள்ளிட்டோர் முன்வைத்தனர்.

இதனைத் தீவிரமாக எடுத்துக்கொண்ட ஜெய்சங்கர், இது குறித்து விசேட அவதானம் செலுத்துமாறு உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிற்கு அங்கேயே உத்தரவிட்டார். மேலும், ஜே.வி.பி-யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவின் இந்திய விஜயம் இயற்கை அனர்த்தத்தினால் பிற்போடப்பட்டுள்ளதை உறுதிப் படுத்திய அவர், மாகாண சபை முறையை முடக்கும் எத்தகைய நகர்வுகளையும் இந்தியா உன்னிப்பாகக் கவனிக்கும் என்ற சமிக்ஞையையும் வெளிப்படுத்தினார்.

தற்போதைய பேரிடர் சூழலை ஒரு காரணமாகக் காட்டி, தேர்தலுக்காக ஒதுக்கப்பட வேண்டிய 11 பில்லியன் ரூபாவைச் சேமிக்க அரசாங்கம் தேர்தலை ஒத்திவைக்கலாம் என்ற அச்சத்தைத் தமிழ் தலைவர்கள் வெளிப்படுத்தினர். 13ஆவது திருத்தம் மற்றும் மாகாணசபை முறைமை குறித்து இந்தியா தனது அழுத்தத்தைத் தொடரும்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்



# இரண்டு ஹீரோக்களும் இனி எம் நினைவில் மட்டுமே

அச்செழு அங்கிள் என்று 19 வயதில் கூப்பிட்டேன்,வா தம்பி வா தம்பி என்று அழைத்து அன்ரியை கூப்பிட்டு எங்கடை பிள்ளைகள் வந்திருக்கிறார்கள் என்று அறிமுகப்படுத்தினார். இவர் தான் ராஜன் எங்கடை பொறுப்பாளர் என்றும் சொன்னார். முதலில் சாப்பிடுங்கள்.சாப்பிட்ட பின்பு கதைப்போம் என்று உபசரித்த அந்த நாள் தான் அங்கிளுடனான முதல் நாள்.





இந்த காலம் என்பது யாழில் சிஐடி. பொலிஸ், காட்டிக்கொடுப்போர் உலா வந்த காலம். நாங்கள் உயிரைகொடுத்து போராடுவதற்கு புறப்பட்டவர்கள். அங்கிளோ, குடும்பமோ அப்படி இல்லை இப்படிப்பட்ட நெருக்கடியான காலகட்டத்தில் இப்படியான ஓர் அங்கிளை சந்தித்து அதுவும் சாப்பாடு தந்து ஆதரவளித்தது என்பது அன்றைய காலகட்டத்தில் ஒரு பெரியவிடயம்.

பகல் முழுவதும் எனக்கு தியாகி தீலிபனாலும், தளபதி கிட்டண்ணாவாலும் தரப்பட்ட ஊர்களில் கடமையை முடித்துவிட்டு இரவு அவர்கள் தங்கும் முகாமுக்குச் சென்று அடுத்த நாள் காலை இருவருக்கும் என்ன வேலை செய்தேன் என்று சொல்லவேண்டும். அங்கிள் வீட்டு சந்திப்பை விபரித்தேன். அவர்கள் நான் ஒரு நாட்டுப்பற்றாளரை கண்டு பிடித்துவிட்டேன் என்று சந்தோசப்பட்டார்கள்.

இங்கே நான் குறிப்பிட்ட நாட்டுப்பற்றாளர் என்ற சொல் அன்று வழக்கத்தில் இல்லை. நாங்கள் ஆதரவாளர் அல்லது சோஸ் வீடு என்ற சொல்லையே பாவித்தோம்.இந்த சொல் 1990களிற்கு பின் எங்கள் அமைப்புடன் சேர்ந்து தமிழ் தேசத்திற்காவும், தமிழ்மொழிக்காகவும், கலை, இலக்கியம், பல்வேறுதுறைகளின் வளரச்சிக்காகவும் உழைத்தவர்கள் மரணித்தபோது “ நாட்டுப்பற்றாளர்” என்று தேசியத்தலைவரால் வழங்கப்பட்ட கெளரவம்.

அங்கிளின் குடும்பம் குடும்பத் தலைவனை இழந்து தவிக்கிறது. நாடு தலைவரை இழந்து தவிக்கிறது நாங்கள் தலைவர் வாயால் அங்கிளுக்கு நாட்டுப்பற்றாளர் கெளவரம் கிடைக்கவில்லை என்று இழப்புடன் கூடியகவலையால் தவிக்கின்றோம்.

அங்கிள் என்றும் பிரபாவின் அப்பா என்றுமே ஆரம்பத்தில் அழைத்தோம் 1987 இல் பிரபா (இரண்டு பெண் பிள்ளகள் )ஒரே ஒரு மகன் திரு. பிரபாகரன் இயக்கத்தில் சேரந்து ஹுரோ ராஜ் ஆகின்றார். ஆனால் அங்கிளுடன் பழகிய எங்களைப்பொறுத்தவரை அவரும் ஒரு ஹுரோவாகத்தான் எல்லா இடங்களிலும் செயற்பட்டார்.

இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த வேளை ஹுரோ ராஜ் 50 கலிபர் துப்பாக்கியுடன் யாழ்கோட்டை காவலரணில் நின்று சியாமாசெட்டி விமானம் ஒன்றை சுட்டு பண்ணைக்கடலில் வீழ்த்தி அன்று கோட்டையின் நாயகனாக இருந்தார்.

இந்த காலகட்டத்தில் அப்பாவும் மகனும் ஹுரோக்களாக எல்லோர் கண்களிலும் தெரிந்தார்கள்.

அங்கிள் கதைக்கும்போது தான் 1981 இல் யாழ் நூல் நிலையம் எரிக்கப்பட்டவேளை விடயமாக அலுவலக ஜீப் வண்டியில் பயணம் செய்த வேளை உரும்பிராய்க்கும் பரமேஸ்வரா சந்திக்கும் இடையில் அன்றைய இளைஞர்கள் அணியின் துப்பாக்கி சூட்டிற்கு உள்ளாகியதாகவும் நல்ல வேளை ஓர் இருசூட்டுடன் நின்றுவிட்டதாகவும் தங்கள் சாரதி ஜீப்பை நிற்பாட்டாது இழுத்து ஓடி தப்பியதாகவும். கடவுள் தன்னை உங்களை எல்லாம் ( தலைவர், போராளிகள் ) காணவேண்டும் என்று தான் தப்ப செய்தவர் என்றும் கூறுவார்.

அங்கிள் நீங்கள் உங்கள் பிள்ளைகளை எப்படி அன்பு காட்டி வளர்த்தீர்களோ அதே அன்புடன் எங்களிற்கு ஆதரவளித்தீர்கள் அடைக்கலம் தந்தீர்கள், உணவு தந்தீர்கள். அச்செழுவில் அமைந்த அல்பேட் முகாமின் காவலனாகவும் நீங்கள் மாத்திரம் நிற்காமல் ஊரையே காவல் கோட்டையாக அக்காச்சியுடன் இணைந்து மாற்றினீர்கள், அங்கிள் நீங்கள் ஒரு மகனுடன் வாழவில்லை பல நூறு மகன்களுடன் வாழ்ந்து 95 வது வயதில் தாய் மண்ணின் நினைவுகளுடன் உங்கள் உயிர் பிரிந்துள்ளது. தாய் மண்ணிலும் உலகப்பரப்பெங்கும் வாழும் உங்களுடன் பழகிய பிள்ளைகள் உங்கள் நினைவுகளில் .....

15/9/1990 இளம் ஹுரோ ராஜ் வீரச்சாவு. என்னால் அச்செழு அங்கிள் என்றும், பிரபாவின் அப்பா எனவும் ஹுரோ ராஜ் அப்பா என்றும், லண்டன் வந்து சண் மாஸ்ரர் என்றும் சண் அங்கிள் என்றும், கிழவன் என்றும் அழைக்கப்பட்டார் எப்போ தொலைபேசியில் கதைத்தாலும் எப்போ வருவாய் வீட்டிற்கு என்று தான் கேட்பார். 20/12/25 (இயற்கை எய்தினார்) இரண்டு ஹுரோக்களும் இனி எல்லோர் நினைவுகளில்....

*கடந்த கால .....*
*நிகழ்வுகளும்*
*எண்ணங்களும்....*
*என்றென்றும்.....*
*அழிவில்லா.......*
*நினைவலைகள்.*

**என்றும் உங்கள் நினைவுகளுடன்.**
**இ. ராஜன்**

## *BNP* தலைவர் ... தொடர்ச்சி ...

*அப்போதைய பிரதமர் ஷேக் ஹசீனா பதவி நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசாங்கம் ஆகஸ்ட் 2024 முதல் ஆட்சியில் உள்ளது. யூனுஸ் நிர்வாகம் பிப்ரவரி 12 அன்று தேர்தலை அறிவித்துள்ளது. அதன் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கு அமைதியான முறையில் அதிகாரத்தை மாற்ற உள்ளது.*

*ரஹ்மானின் தாயார், முன்னாள் பிரதமர் கலீதா ஜியா, நவம்பர் 23 முதல் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வங்கதேசத்தின் மிகப்பெரிய அரசியல் கட்சியான வங்கதேச தேசியக் கட்சியின் உண்மையான தலைவராக, ரஹ்மான் விரைவில் நாட்டின் ஆட்சியைப் பிடிக்கக்கூடும்.*

*ரஹ்மான் 2008 முதல் லண்டனில் வசித்து வருகிறார், மேலும் 2018 ஆம் ஆண்டு முதல் BNP செயல் தலைவராக உள்ளார், அவரது நோய்வாய்ப்பட்ட தாயார் ஜியா, அவரது அரசியல்போட்டியாளரும், பிரதமருமானஹசீனாவின் ஆட்சியின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்.*

*2001 முதல் 2006 வரை தனது தாயாரின் இரண்டாவது பதவிக் காலத்தில், அவர் ஒரு முக்கிய நபர். ஆனால் அவர் மீது குடும்ப உறவு, ஊழல் மற்றும் அரசியல் வன்முறை குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டன. 2007 இல், அவர் இராணுவப் பிரிவுகளால் கைது செய்யப்பட்டார். மாதங்களுக்குப் பிறகு, அவர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சைக்காக ஐக்கிய இராச்சியத்திற்கு சென்றிருந்தார்.*

## சீனாவுக்கும் ... தொடர்ச்சி ...

*அமெரிக்க அறிக்கை சீனாவின் பாதுகாப்புக் கொள்கையைத் திரிபுபடுத்துகிறது, சீனாவிற்கும் பிற நாடுகளுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்த முயல்கிறது, மேலும் அதன் சொந்த இராணுவ மேலாதிக்கத்தைப் பேணுவதற்கான சாக்குகளை வழங்குகிறது. சீனா இதை உறுதியாக எதிர்க்கிறது. இருதரப்பு உறவுகளை உறுதிப்படுத்தவும், அமெரிக்க-இந்திய உறவுகள், ஆழமடைவதைத் தடுக்கவும், இந்தியாவுடனான சர்ச்சைக்குரிய எல்லையான உண்மையான கட்டுப்பாட்டுக் கோடு தொடர்பில் குறைக்கப்பட்ட பதட்டங்களை சீனா “பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறது என்று பரிந்துரைத்த பென்டகன் அறிக்கை தவறானது.*

*சீன-இந்திய எல்லைப் பிரச்சினை இரு நாடுகளுக்கும் இடையிலான ஒரு விஷயம். சீன-இந்திய எல்லையில் ஒட்டுமொத்த நிலைமை நிலையானதாக உள்ளது, மேலும் இரு தரப்பினருக்கும் இடையிலான தொடர்பு வழிகள் திறந்தே உள்ளன. இந்த விஷயத்தில் எந்த நாடும் கருத்து தெரிவிப்பதை நாங்கள் எதிர்க்கிறோம், என்று செய்தித் தொடர்பாளர் வலியுறுத்தினார்.*

*2020 ஜூன் மாதம் கொடிய எல்லை மோதல்களால் ஏற்பட்ட கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகால முட்டுக்கட்டைக்குப் பிறகு பெய்ஜிங்கிற்கும் புதுடெல்லிக்கும் இடையிலான உறவுகள் கணிசமாக மேம்பட்டுள்ளன. 2024 அக்டோபரில் ரஷ்யாவின் கசானில் நடந்த பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் சீன அதிபர் ஜி ஜின்பிங்கிற்கும் இடையிலான சந்திப்பிற்குப் பிறகு உறவுகளில் நெருக்கம் தொடங்கியது.*

*அக்டோபரில், ஐந்து வருட இடைவெளிக்குப் பிறகு சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே நேரடி விமானங்கள் அதிகாரப் பூர்வமாக மீண்டும் தொடங்கப்பட்டன. இரு நாடுகளும் ஒருவருக்கொருவர் விசா சேவைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளன.*

# சோதனைகளும் வேதனைகளும் நிறைந்த 2025



விதுரன்

2025ஆம் ஆண்டு இலங்கையின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக வரலாற்றில் ஒரு மாபெரும் மாற்றத்திற்கான ஆண்டாகவும், அதே வேளை சொல்லொணா இயற்கைப் பேரிடர்களால் நாடு சோதைக்குள்ளாகியுள்ளதொரு காலப் பகுதியாகவும் வரலாற்றுத் தடத்தில் பதிவாகியுள்ளது.



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தனது அதிகாரத்தை பேரனர்த்த நிவாரணங்களை பயன்படுத்தியேனும் அடிமட்டம் வரை கொண்டு செல்ல முயற்சித்துக்கொண்டிருக்கும் மூன்றாந்தர அரசியல் கலாசாரம் அரங்கேறிவருகின்ற அதே வேளை, தமிழ் மக்களின் நீண்டகால அபிலாஷைகள், பொறுப்புக்கூறல் மற்றும் சர்வதேச இராஜதந்திர நகர்வுகள் இவ்வருடம் முழுவதும் கனவுகளாக நாட்கள் கடந்தோடும் காலமாகவே தான் அமைந்துள்ளன.

அரசியல் களத்தைப் பொறுத்தமட்டில், மே 6, 2025 அன்று நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நாட்டின் புதிய அரசியல் வரைபடத்தை வெளிப்படுத்தியுள்ளன. இந்தத் தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் 43.26சதவீதமான வாக்குகளைப் பெற்று, மொத்தமுள்ள 339 உள்ளூராட்சி சபைகளில் 265 சபைகளைக் கைப்பற்றி தனது பலத்தை நிலைநிறுத்தியது.



இருப்பினும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் அரசியல் கட்சிகள் தங்களுக்குள் நிலவிய பிளவுகளுக்கு மத்தியிலும் கணிசமான செல்வாக்கைச் செலுத்தியிருந்தன.

குறிப்பாக, இலங்கைத் தமிழரசுக் கட்சி 35 சபைகளைக் கைப்பற்றி தனது மேலாதிக்கத்தைத் தக்கவைத்துக் கொண்டது. அதேவேளை, ஈ.பி.ஆர்.எல்.எப். ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள், தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய ஐந்து கட்சிகளும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற பெயரில் தமிழரசுக் கட்சிக்கு மாற்றாக 'சங்கு' சின்னத்தில் போட்டியிட்டு குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றிருந்தது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தனது பங்கிற்கு வெற்றிகளைத் தக்க வைத்துக்கொண்டது.

இருப்பினும் ஆட்சியமைப்பதில் தமிழரசுக் கட்சி யின் விட்டுக்கொடுக்காத தன்மையால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், ஜன நாயக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கூட்டிணைவு பத்து உள்ளூராட்சி மன்றங்கள் வரையில் தமதாக்கிக் கொண்டன. இந்தக் கூட்டிணைவ கொள்கை அடிப்படையில் அமை வதாகவே காண்பிக்கப்பட்டு உடன்பாடும் செய்யப்பட்டது. குறித்த கொள்கைக் கூட்டில் சந்திரகுமார் தலைமையிலான சமவத்துக் கட்சியும் இணைந்து கொண்டிருந்தது.

எனினும் சொற்ப காலத்தில் ஜனநாய தமிழ்த் தேசியக் கூட்டணியானது 13ஆவது திருத்தச்சட்டத்தினை வலியுறுத்தி செயற்பாடுகளை ஆரம்பித்தமையால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முரண்பட்டது. ஈற்றில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தமிழரசுக்கட்சியுடன் மீண்டும் கைகோர்க்கும் நிலையை அடைந்துள்ளது. இதற்குப் பின்னால் சுமந்திரனின் முதலமைச்சர் கனவும் காணப்படுகின்றது என்பது தனிக்கதை.



அதேநேரம், மலையக அரசியலில், பாரம்பரியமாக ஆதிக்கம் செலுத்தி வந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கடுமையான பின்னடைவைச் சந்தித்த நிலையில், மனோகணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி ஓரளவு தம்மை தக்க வைக்கும் நிலைக்குச் சென்றிருந்தன.

குறிப்பாக, அக்டோபர் மாதம் முதல் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட 1,700 ரூபா நாளாந்த அடிப்படைச் சம்பளம், ஒரு நீண்டகாலப் போராட்டத்திற்குப் பின் கிடைத்த சமூக நீதியாகவும், அரசாங்கத்தின் முக்கிய தீர்மானத்தின் பிரகாரம் எடுக்கப்பட்ட செயற்பாடாகவும் பார்க்கப்படுகிறது.

தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தில் 2025ஆம் ஆண்டு ஜூலை மாதம் கறுப்பு அத்தியாயமாக அமைந்திருக்கின்றது. யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் போது, குழந்தைகள் உள்ளிட்ட 240 க்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டமை சர்வதேச அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.



இந்தச் செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம், போர்க்கால மீறல்கள் தொடர்பான விவாதங்களை மீண்டும் உலக அரங்கிற்கு கொண்டு வந்திருந்ததோடு பொறுப்புக்கூறலின் அவசியத்தையும் வெகுவாகவே வலியுறுத்தியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, அக்டோபர் 6, 2025 அன்று ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில், இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் 60/1 தீர்மானம் வாக்கெடுப்பின்றி ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டது. இத்தீர்மானம் இலங்கையின் மனித உரிமை நிலைமைகளை கண்காணிக்கும் சர்வதேச பொறிமுறையை 2027வரை நீட்டித்துள்ளது.



அரசாங்கம் இந்தத் தீர்மானத்தினை 'வெளிநாட்டுத் தலையீடு' என்று ஆரம்பத்தில் விமர்சித்தாலும், சர்வதேச அழுத்தங்களுக்குப் பணிய வேண்டிய கட்டாயத்தில், நவம்பர் மாதம் வடக்கு-கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த சுமார் 5,000 ஏக்கர் பொதுமக்களின் காணி விடுவிப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக அறிவித்தது. ஆனால் தீர்மானத்தினை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பதை பகிரங்கமாகவே வெளிப்படுத்தியது.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# சிறிலங்கா மற்றும் ஈழத்தமிழர் அரசியலைக் கலக்கிய டித்வா புயல்

**இன்றைய நேர்காணலில் மட்டக்களப்பிலிருந்து, நீண்ட காலமாக தமிழ் தேசிய அரசியல் களத்தில் செயற்பட்டு வரும் அரசியல் வாதியும் சமூக செயற்பாட்டாளருமான திருமிகு பாக்கியசெல்வம் அரியநேத்திரன் சமீபத்தில் வெளியிட்ட "வீடுகுலுங்குகிறது; அதைத் தாங்கிப் பிடிக்கச் சங்குதான் உள்ளது" என்ற அரசியல் உவமை, தமிழ் அரசியல் சூழலில் பரவலானவிவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்தக் கருத்தின் பின்னணியையும், இன்றைய தமிழ் அரசியல் எதிர்கொள்ளும்நெருக்கடிகளையும் விரிவாகப் பார்ப்போம்**

**“வீட்டையே தாங்கிப் பிடிக்கச் சங்கு தான் உள்ளது என்று நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். அதன் அரசியல் பொருள் என்ன?**

*இந்தக் கூற்று ஒரு உவமை மட்டுமல்ல, அது தமிழ் அரசியல் இன்று எந்த நிலையில் நிற்கிறது என்பதைவெளிப்படுத்தும் ஒரு ஆழமான அரசியல் உண்மை. 21ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில், பல தரப்பினரின்தொடர்ச்சியான வேண்டுகோளின் பேரில் நான் தமிழ் பொது வேட்பாளராக போட்டியிட்டேன். அந்தத் தேர்தலில் “சங்கு”என்ற சின்னத்தை சுய சின்னமாக தேர்தல் திணைக்களத்தில் நான் பெற்றேன்.*

*அந்தச் சின்னத்திற்கான சட்டபூர்வமான உரிமை கோரக்கூடிய நபர் நானே. இந்தச் சின்னத்தின் கீழ் ஏழு தமிழ் தேசிய கட்சிகள், பல்வேறு சிவில் அமைப்புகள், பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து தேர்தல் பிரச்சாரம் செய்தனர்.அதன் விளைவாக, நான் 22,636 வாக்குகளைப் பெற்றேன். இங்கு நான் கூறும் “வீடு” என்பது தமிழ் அரசியல்கட்டமைப்பை குறிக்கிறது. அந்த வீடு இன்று உறுதியான அத்திவாரமின்றி குலுங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக்கட்டமைப்பு முற்றாக இடிந்து போகாமல் இன்னும் தாங்கி நிற்கும் ஒரே அடையாளமாக, சங்கு இன்று மாறியுள்ளதுஎன்பதே அந்த உவமையின் அரசியல் சாரம்.*

**தேர்தல் காலத்தில் சங்கு சின்னம் அவமதிக்கப்பட்டதாக நீங்கள் கூறுகிறீர்கள். அந்த அனுபவத்தை விளக்க முடியுமா?**

*தேர்தல் காலத்தில் என்னை நேரடியாக விமர்சிக்காமல், சின்னத்தையே அவமதிப்பதன் மூலம் அரசியல் செய்ய முயன்றஒரு போக்கு தெளிவாக இருந்தது. “சங்கை தோற்கடிப்போம்”, “சங்கிற்கு குழி தோண்டப்படும்”, “சங்கு ஊதுகிறார்கள்” போன்ற வார்த்தைகள் திட்டமிட்டு பரப்பப்பட்டன.*



*இவை எந்த அரசியல் விமர்சனங்களும் அல்ல, ஒரு அரசியல் அடையாளத்தை சமூக ரீதியாக கேலிக்குரியதாக மாற்றும் முயற்சிகள். குறிப்பாக இலங்கை தமிழரசுக் கட்சிக்குள்இருந்த ஒரு அணியினர், என்னைப் பற்றிப் பேசாமல் சங்கு சின்னத்தை மட்டும் மையமாக வைத்து இந்த அவமதிப்புபிரச்சாரத்தை முன்னெடுத்தனர். ஆனால் தேர்தல் முடிந்த பின்னர், அதே சங்கு சின்னம் இன்று அரசியல் ஆதாரமாகவும்தேர்தல் அடையாளமாகவும் தேடப்படும் நிலை உருவாகியுள்ளது. இது தமிழ் அரசியலில் நிலவும் இரட்டைத்தரநிலையையும், சந்தர்ப்பவாத அரசியலையும் தெளிவாக வெளிப்படுத்துகிறது.*

**இந்த விவகாரத்தில் உங்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகச்சொன்னீர்கள். அதன் நிலை என்ன?**

*செப்டம்பர் 14ஆம் திகதி, தேர்தலுக்கு சரியாக 14 நாட்களுக்கு முன்பு, எனக்கு ஒரு விளக்கக் கடிதம் அனுப்பப்பட்டது. அந்தக் கடிதத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் அதற்கு உரியவிளக்கத்தை எழுத்துபூர்வமாக முறையாக அனுப்பி வைத்தேன். ஆனால் இன்றுவரை அந்த விளக்கத்திற்கான எந்தப்பதிலும் வரவில்லை. இதற்கிடையில் கட்சியின் பதில்செயலாளர்களும், பதில் தலைவர்களும் மாறியுள்ளனர்.இருந்தாலும், கட்சி என்ற அமைப்பாக ஒரு தெளிவான முடிவு எடுக்கப்படவில்லை. இது ஒரு அரசியல் கட்சியின்நிர்வாகச் சீர்கேடும், பொறுப்பற்ற அணுகுமுறையும் என்பதைத் தவிர வேறெதையும் காட்டவில்லை.*

**இலங்கை தமிழரசுக் கட்சியின் இன்றைய நிலையை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

*1949ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 77 ஆண்டுகளைக் கடந்த வரலாற்று முக்கியத்துவம் கொண்ட இலங்கை தமிழரசுக்கட்சி, இன்று நிரந்தர தலைவர் இல்லாமலும், நிரந்தர பொதுச் செயலாளர் இல்லாமலும் இயங்கும் நிலையில் உள்ளது. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட 70 அரசியல் கட்சிகளில் 69 கட்சிகளுக்கு நிரந்தர தலைமை உள்ளது. ஆனால் இந்த“தாய் கட்சி” மட்டும் இடைக்கால நிர்வாகங்களின் கீழ் தள்ளாடுகிறது. இது ஒரு நிர்வாகப் பிரச்சினை மட்டுமல்ல; தமிழ்தேசிய அரசியல் முழுவதும் எதிர்கொள்ளும் ஒரு ஆழமான நெருக்கடியின் பிரதிபலிப்பாகவே இதைப் பார்க்கவேண்டும்.*

**2010க்கு பிந்தைய தமிழ் தேசிய அரசியலை நீங்கள் எவ்வாறு மதிப்பிடுகிறீர்கள்?**

*2009க்குப்பிறகுநடைபெற்ற2010தேர்தலில், “தேசமாக மக்களை அணிதிரட்டுவோம்” என்ற வாக்குறுதி தெளிவாகமுன்வைக்கப்பட்டது. ஆனால் கடந்த 16 ஆண்டுகளில், அந்த வாக்குறுதியை நடைமுறைப்படுத்தும் எந்தஒருங்கிணைந்த அரசியல் கட்டமைப்பும் உருவாக்கப்படவில்லை. அரசியல் இன்று மக்களின் உரிமைகளைமீட்டெடுக்கும் கருவியாக இல்லாமல், பதவி, ஆசனம், அதிகாரம் என்பவற்றை மையமாகக் கொண்டு சுழல்கிறது. மண்ணுரிமை, இறையாண்மை, இன உரிமை போன்ற அடிப்படை விடயங்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுகின்றன.*

**தமிழ்நாட்டுக்குச் சென்ற தமிழ் அரசியல் கட்சிகளின் முயற்சியை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

*தமிழ்நாட்டுக்குச் சென்று அங்குள்ள அரசியல் தலைவர்களைச் சந்தித்தது, முயற்சியாகப் பார்க்கும் போது தவறில்லை. ஆனால் அந்தச் சந்திப்புகளில் முன்வைக்கப்பட்ட விடயங்களில் அரசியல் தெளிவும், கொள்கை உறுதியும் குறைவாகஇருந்தது. ஏற்கனவே சட்டமன்றங்களிலும், அரசியல் தீர்மானங்களிலும் நிறைவேற்றப்பட்ட விடயங்களைவலுப்படுத்தும் வகையில் இந்தப் பயணம் அமைந்திருக்க வேண்டி யது. அதற்கு மாறாக, சில இடங்களில் அடிப்படை அரசியல் கொள்கைகளில் குழப்பம் ஏற்பட்டதாகவே தோன்றுகிறது.*





**இன்றைய பூகோள அரசியல் சூழலில் ஈழத் தமிழர் அரசியல் எங்கு நிற்கிறது?**

இலங்கை இன்று ஒரு பூகோள அரசியல் போட்டிக் களமாக மாறியுள்ளது. இந்தியா, சீனா, அமெரிக்கா போன்றநாடுகள் தங்களது அரசியல் மற்றும் மூலோபாய நலன்களை மையமாகக் கொண்டு இங்கு செயற்படுகின்றன. இந்தச்சூழலில், ஒருங்கிணைந்ததும் பலமானதுமான தமிழ் அரசியல் குரல் இல்லாமல் எந்தத் தீர்வையும் எதிர்பார்க்க முடியாது. எட்டு கட்சிகள் சந்திப்பது மட்டும் தீர்வாகாது. தேசமாக மக்களை அணிதிரட்டும் அரசியல் இயக்கம்உருவாகும்போதுதான், இந்தப் பூகோள அரசியல் சூழலை எதிர்கொள்ளும் சக்தி தமிழ் அரசியலுக்கு கிடைக்கும்.

• • •

**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு பா. அரியநேத்திரன் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**






இன்னும் நான்கு தினங்களில் புதிய ஆண்டு 2026ல் கால் பதிக்கின்றது கடந்து போகும் 2025 ம் ஆண்டு பல்வேறு தடைகள், தாமதங்கள், அனர்த்தம் என பலவற்றை கடந்து புத்தாண்டு பிறக்கிறது. வழமையாக எல்லோரும் சொல்வது 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என கடந்த வருடங்கள்எல்லாம்அப்படிசொல்லிச்சொல்லியே எந்த வழிகளும் பிறக்கவில்லை. மாறாக வலிகள் தொடர்ந்ததே ஈழத்தமிழர்களுடைய வரலாறு.



கிழக்குமாகாணத்தைஎடுத்துக்கொண்டால் அரசியல் ரீதியாக 2025 மே 06ல் உள்ளூராட்சி தேர்தல் இடம்பெற்று மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள பிரதேச சபைகள், நகர, மாநகர சபைகள் எல்லாம் ஆட்சியமைத்தாலும் 07 மாதங்கள் மட்டுமே கடந்த நிலையில் எதிர்பார்த்த அபிவிருத்திகள் இடம்பெறவில்லை. இதற்கான 2026 பாதீடு சமர்பித்து இப்போது நிறைவேற்றப்படுகிறது. 2026ல் அரசினால் நிதிவளம் கிடைத்தால் ஓரளவு அபிவிருத்திகளை சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகள் மேற்கொள்ளலாம்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் மிக நீண்ட கால பிரச்சனைகளில் ஒன்றாக கருதப்படும் மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை விவகாரம் ஏமாற்றமும், அரசியல்வாதிகளுடைய கதைகளை நம்பி ஏமாறும் பண்ணையாளர்களின் பரிதாபங்களுடனே கடந்த 2025 லும் எந்த தீர்வும் இன்றி கடந்து சென்றது.

அதுபோலவே அம்பாறை மாவட்டத்தில் பேசும் பொருளாக கருதப்படும் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துவதற்கான முயற்சியும் வழமை போன்று கடந்த ஆண்டும் ஏமாற்றமாகவே நீதிமன்ற வழக்கு நிலுவையுடன் தொடர்கிறது.



இதுபோலவே திருகோணமலை மாவட்டத்திலும் விவசாய காணிகளில் சோலர் மின் இணைப்பை தடைசெய்யுமாறு மக்கள் எதிர்ப்பு தெரிவித்தபோதும் அதனை அநுர அரசு கணக்கெடுக்கவில்லை. இதில் குறிப்பிட்ட மூன்று மாவட்டங்களில் உள்ள பிரச்சனைகளை உதாரணமாக சுட்டி காட்டப்பட்டாலும் கிழக்கு மாகாணத்தில் கடந்த 2025 நவம்பர் 27 தொடக்கம் 30 வரை ஏற்பட்ட மழை வெள்ளம் மாவிலாறு அணைக்கட்டு உடைப்பால் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக திருகோணமலை மூதூர் பிரதேச செயல பிரிவை சேர்ந்த மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்,

நிவாரணங்கள் வழங்கப்பட்டாலும் அவர்களுக்கான ஏனைய அடிப்படை வசதிகள் சீர்செய்யப்படாமல் 2026 புத்தாண்டை வரவேற்க்க வேண்டிய நிலையில் அந்த மக்கள் உள்ளனர்.

இந்தியா 2 371.83 மில்லியன் ரூபாய் மானியத்துடன் 33 அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதாக அறிவிப்பு கிடைத்துள்ளது, இதில் உட்கட்டமைப்பு, வாழ்வாதாரம் மற்றும் சமூக நலத்திட்டங்கள் அடங்கும். இதற்காக இந்திய உயர் ஆணையம் மற்றும் மாகாண அரசுகளுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் திண்மக் கழிவு மேலாண்மையை மேம்படுத்த ஒரு மாகாண அளவிலான செயல்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, இது கழிவு மேலாண்மையை செலவு குறைந்த மற்றும் நிலையான செயல்முறையாக மாற்ற உதவுகிறது. வீட்டுவசதி, வாழ்வாதார அபிவிருத்தி போன்ற திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம், வீதி வலைப்பின்னலை மேம்படுத்துதல், வடிகால் அமைப்புகளை மேம்படுத்துதல், மற்றும் சாலைத் தரவுகளைப் புதுப்பித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

**கல்வி மற்றும் மனிதவளம்**

மோசமான வானிலை காரணமாக மூடப்பட்ட பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டன. 2025 ல் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தின் மக்கள் தொகை வளர்ச்சி வீதம் தேசிய சராசரியை விடக் குறைவாக உள்ளது, இது ஒரு சவாலாக உள்ளது. எனினும் அபிவிருத்தித் திட்டங்கள் இதை நிவர்த்தி செய்ய உதவுகின்றன. மோசமான வானிலை காரணமாக சில சமயங்களில் பாடசாலைகள் மூடப்பட்டன. ஒட்டுமொத்தமாக, 2025 ல் கிழக்கு மாகாணம் பல்துறை அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் முன்னேற்றம் அடைந்து வருவதாக அறிக்கைகளில் காட்டப்பட்டாலும் இந்தியா மற்றும் ஐ.நா. போன்ற சர்வதேச அமைப்புகளின் ஆதரவுடன் உட்கட்டமைப்பு மற்றும் சமூக மேம்பாட்டில் எதிர்வரும் 2026 ல் கவனம் செலுத்தப்படலாம்.

கிழக்கு மாகாணத்தில் 114 சிறிய கைத்தொழில்களில் 114 பேரும், 32 நடுத்தரக் கைத்தொழில்களில் 896 பேரும், 50 பாரியளவிலான கைத்தொழில்களில் 15,904 பேருமாக, மொத்தமாக 196 கைத்தொழில் சாலைகளில் 16,914 பேர் நேரடியாகத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர்.



கிழக்கு மாகாணத்தின் திருகோணமலையில் 25 சிறிய கைத்தொழில்களில் 28 பேரும், 8 நடுத்தரக் கைத்தொழில் மையங்களில் 851 முயற்சியாளர்களும், 20 பாரிய கைத்தொழிற் சாலைகளில் 4,994 பேரும் நேரடியாக ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 55 சிறிய கைத்தொழில் மையங்களில் 45 பேரும், 07 நடுத்தரக் கைத்தொழில் மையங்களில் 285 பேரும், 17 பாரிய கைத்தொழிற் சாலைகளில் 6,442 பேரும் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்



கின்னியான்

# டித்வா புயலின் தாக்கத்தால் மீள எழ முடியாது தவிக்கும் மக்கள்

அண்மையில் இலங்கையில் பெருமளவான சேதங்களை ஏற்படுத்தி நாட்டின் தலைவிதியை மாற்றியமைத்த டித்வா புயல் காரணமாக இன்னும் அதில் இருந்து மீள எழ முடியாது பாதிக்கப்பட்ட மக்கள் தவிக்கின்றனர்.



நாட்டின் மலையகப் பகுதி உட்பட கிழக்கு மாகாணத்தையும் இது பாதித்துள்ளது. கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு, குளங்களின் வான் கதவுகள் உடைப்பு எனப் பேரிடர் காரணமாக பல உயிர் சேதங்களையும், பல சொத்துக்களையும் இழக்கச் செய்துள்ளது. இதனால் கிழக்கு மாகாணத்தில் அதிகளவாக திருகோணமலை மாவட்டமும் பாதிக்கப்பட்ட நிலையில் முக்கிய தொழில்களாக காணப்படுகின்ற விவசாய ,மீன் பிடி,கால் நடை வளர்ப்பு போன்றனவும் பாதிக்கப்பட்டுள்ளன.



குறிப்பாக பாடசாலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. பாடசாலை செல்லும் மாணவர்களின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு உளவியல் ஆலோசனை தேவையாக உள்ளது. மீண்டும் பாடசாலைக் கல்வியை மாணவர்கள் மத்தியில் ஊக்குவிக்க செய்ய வேண்டும். இவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணத்தை பொறுத்தமட்டில் கிழக்கு மாகாண பாதிப்பு தொடர்பில் மாகாண ஆளுனர் பேராசிரியர் ஜயந்தலால் ரட்ணசேகர பாடசாலை அபிவிருத்தி மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிதி உதவி வழங்கியமை தொடர்பிலும் தகவல் வெளியிட்டுள்ளார்.



இதனடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக 142,793 நபர்களை சேர்ந்த 46,250 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 12 உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. முழுமையாக 132 வீடுகளும் பகுதியளவில் 2182 வீடுகளும் சேதமடைந்துள்ளது. அதே நேரம் அரசாங்கத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவாக ரூபா 25,000.00 உம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக வழங்கப்பட்டுள்ளது.

மொத்தமாக திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை சேர்ந்த 23,889 குடும்பஙாகளுக்கு தலா ரூபா 25,000.00 வழங்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



இதனுடன் இணைந்ததாக கிழக்கில் பாதிக்கப்பட்ட 17 கல்வி வலயங்களை சேர்ந்த 346 பாடசாலைகளுக்காக ரூபா 253,859,000 ஒதுக்கப்பட்டுள்ளது. அம்பாறையில் 07 வலயங்களை சேர்ந்த 87 பாடசாலைகளும், மட்டக்களப்பில் 05 வலயங்களை சேர்ந்த 113 பாடசாலைகளும், திருகோணமலையில் 05 வலயங்களை சேர்ந்த 146 பாடசாலைகளுக்குமே இவ்வாறு மீள் புனர் நிர்மாணத்திற்காக நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் டித்வா புயல் காரணமாக கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட நெற்பயிர்ச் செய்கைக்கான அழிவுகள் மற்றும் அதற்கான இழப்பீடுகள் வழங்கப்பட்டமை தொடர்பில் மாகாண விவசாய பணிப்பாளர் எம்.எஸ்.நினூஸ் அவர்களை தொடர்பு கொண்டு வினவிய போது இது குறித்து தெரிவிக்கையில், "கிழக்கில் மொத்தமாக 21,272 ஹெக்டேயர் நிலப்பரப்புக்களை சேர்ந்த 33,640 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மாவட்ட அடிப்படையில் பார்க்கின்ற போது திருகோணமலை மாவட்டத்தில் 15,389 ஹெக்டேயர் பரப்பளவை கொண்ட 23516 விவசாயிகளும், மட்டக்களப்பில் 2961 ஹெக்டேயரை சேர்ந்த 5009 விவசாயிகளும் ,அம்பாறையில் 2922 ஹெக்டேயரை சேர்ந்த 5115 விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது வரைக்கும் சுமார் 3190 மில்லியன் ரூபா இழப்பீடு தொகைகளாக வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். விவசாய செய்கை அழிவு தொடர்பான சேத விபரங்களை கமநல அபிவிருத்தி திணைக்களத்தினர் இணைந்து விவசாயதிணைக்களமும் மதிப்பீடு செய்திருந்தனர். விவசாய துறை அமைச்சரும் திருகோணமலைக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை பார்வையிட்டுள்ளார்.

முக்கியமாக கிழக்கு மாகாணத்தை பொறுத்தமட்டில் நெற் பயிர் விவசாய செய்கை சிறந்து விளங்குவதுடன் விவசாயத்தை நம்பியே விவசாயிகள் அன்றாட ஜீவனோபாயத்தை கடத்துகின்றனர்.



நெற்பயிர்ச் செய்கைகளுக்காக அழிவடைந்த வயல் நிலங்களில் மீண்டும் விதைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள விவசாயிகள் பலர் தங்களுக்கான திருப்தி இல்லை எனவும் அங்கலாய்க்கின்றனர். கடன்பட்டு செய்த விவசாய செய்கை மூலமாக விளைச்சலை எதிர்பார்த்து விதைத்திருந்த போதும் கூட இவ்வாறான பாரிய

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

கட்டுரை

# “இரைப்பை புண்ணுக்கு எலுமிச்சை சாறு” புதிய பயங்கரவாத தடைச்சட்டம்!

பா. அரியநேத்திரன்

1979, ம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டத்தை பாராளுமன்றில் மட்டக்களப்பு மாவட்டம் கல்குடா தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் நீதி அமைச்சர் கே டவிலியூ தேவநாயகம் அவர்களால் கடந்த 1979,யூலை ,19,ம் திகதி மு.ப.10.45 மணிக்கு சமர்ப்பிக்கப்பட்டு மதிய போசன இடை வெளியின் பின்னர் அன்று பி.ப.01, மணிக்கு நிறைவேற்றப்பட்டது!

எதிர்க்கட்சி தலைவராக அப்பாபிள்ளை அமர்தலிங்கம் தலைமையில் இருந்த தமிழர் விடுதலை கூட்டணி 18, உறுப்பினர்கள் இருந்தபோதும் எதிர்த்து கருத்துகளை முன்வைத்து வாக்கெடுப்பில் இருந்து விலகினர்,

அன்று நிறைவேற்றிய சட்டம் 2025 இன்று வரை 46, வருடங்களாக தொடர்வதே வரலாறு.

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு பதிலாக புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் கொண்டுவரப் படுவதற்காக கடந்த 2022, ல் முயற்சி எடுக்கப்பட்டு பல திருத்தங்களுடன் உருவாக்கப்பட்டு புதிய சட்டம், பழைய சட்டத்தின் மனித உரிமை மீறல்கள் குறித்த விமர்சனங்களைக் கருத்தில் கொண்டு, சித்திரவதை உள்ளிட்ட அம்சங்களை நீக்குவதாகவும், ஜனநாயக வழிமுறைகளைப் பின்பற்றுவதாகவும் கூறப்பட்டது ஆனால் அதன் வரைவுகள் குறித்த கவலைகள் மற்றும் விவாதங்கள் பல்வேறு திருத்தங்கள் மற்றும் சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்பட்டும் வந்தபின் 2022 ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் (Act No. 12 of 2022) போன்ற பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

சுருக்கமாக, இலங்கை அரசாங்கம் பயங்கர வாதத் தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு, அதன் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வர முயற்சித்தும் அது நிறைவேறவில்லை. ஆனால் அதன் வரைவுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல் குறித்து தொடர்ச்சியான கண்காணிப்பும் விவாதமும் தேவைப்படுகிறது.

தற்போது தேசிய மக்கள் சக்தி அநுர தலைமையிலான அரசு பயங்கரவாதத் தடுப்பு சட்டமூலம் தொடர்பாக தற்போது ஒரு திருத்தத்தை வரைந்து அது இறுதியானது அல்ல என்று கூறிய நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, பொதுமக்களின் கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை பரிசீலித்த பிறகு, அமைச்சரவை அல்லது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பு இந்த சட்டமூலம் திருத்தப்படும் என்று கடந்த (22/12/2025) அன்று தெரிவித்தார்.



ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அர்செகுலரத்ன தலைமையிலான குழுவால் வரையப்பட்ட இந்த சட்டமூலம், நீதி அமைச்சின் இணையதளத்தில் மூன்று மொழிகளிலும் பதிவேற்றப்பட்டுள்ளது என்றும்,

எதிர்வரும் 2026,பெப்ரவரி,28,வரை மக்கள் தங்கள் கருத்துகளையும் பரிந்துரைகளையும் சமர்ப்பிக்கலாம் என்றும் அமைச்சர் கூறினார்.

பொதுமக்களின் கருத்துகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்காக சட்டமூலத்தை வரைந்த அதே குழுவிடம் பொதுமக்களின் கருத்துகளும் பரிந்துரைகளும் சமர்ப்பிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

ஆனால் இதனை அவதானித்த பலர் இந்த வரையும் ஏற்கனவே 1979, ல் நிறைவேற்றப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டத்தை விட மோஷமானது என்ற கருத்தை கூறியுள்ளனர்.

யார் ஜனாதிபதிகளாக நிறைவேற்று அதிகாரத்தில் இருந்தாலும் 1979, ஜே ஆர் ஜெயவர்தன ஆட்சியில் மட்டக்களப்பு கல்குடா தொகுதி பாராளுமன்ற உறுப்பினரால் நாடாளுமன்றத்தில் சமர்பித்து நிறைவேற்றப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கு எவரும் தயாரில்லை அதில் தற்போதைய ஜனாதிபதி அநுராவும் மாற்றமில்லை.

சர்வதேச மனித உரிமை செயல்பாட்டாளர்கள் தொடர்சியான அழுத்தம் காரணமாக பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாகவும், திருத்துவதாகவும் கூறி இப்போது கொழுக்கட்டை, மோதகம் போல் வடிவங்கள் வேறு உள்ளே உள்ள சுவை சுண்டல் ஒன்றுதான் என்ற நிலைமைதான் புதிய பங்கரவாத தடைச்சட்டம் என்ற பெயரை மட்டும் மாற்றி “பயங்கரவாதச் செயல்களைக் கையாள்வதற்கான சிறப்புச் சட்டம்” என அழைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப் படுவதை அவதானிக்க முடிகிறது.

கொலை, சித்திரவதை, பணயக்கைதிகளாக வைத்திருத்தல் மற்றும் சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருத்தல் போன்றவை ஏற்கனவே தண்டனைச் சட்டக்கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனவே பயங்கரவாத்தடைச்சட்டம் என்பதை முழுமையாக இல்லாமல் செய்யவேண் டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

ஆனால் சர்வதேசத்தை பேய்க்காட்டும் விதமாக இரைப்பை புண்ணுக்கு எலுமிச்சை சாறு போன்று புதிய பயங்கரவாத தடைச்சட்டமாகவே இது அமையும் என்பதே உண்மை.

• • •

## இந்தியாவின் ... தொடர்ச்சி ...

என்பதை அவர் இம்முறை உணர்ச்சிகரமான முக பாவங்களுடன் உறுதிப்படுத்தினார்.

சீனா வெறும் வாக்குறுதிகளுடனும் 82ஆயிரம் டொலர்கள் வரையான மிகச்சிறிய கொடைகளுடனும் வந்து செல்லும் வேளையில், இந்தியா 450 மில்லியன் டொலர்கள் மற்றும் ஏற்கனவே வழங்கிய 4 பில்லியன் டொலர்கள் கடன் மறுசீரமைப்பு போன்ற காத்திரமான உதவிகள் மூலம் தன்னை ‘உண்மையான நண்பன்’ என்று நிரூபித்து மார்பு தட்டிக்கொண்டிருக்கின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அனுப்பிய ‘தோளோடு தோள் நிற்போம்’ என்ற செய்தி, இலங்கைக்கு இன்னொரு தரப்பு தோள் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற மறைமுகமான எச்சரிக்கையையும் சீனாவிற்கு விடுத்துள்ளது.

முதலீட்டு ரீதியாக சீனாவின் ஆதிக்கம் இருந்தாலும், நெருக்கடியான காலங்களில் சீனா கஞ்சத்தனத்துடன் நடந்து கொள்வதையும், இந்தியா தார்மீக உரிமையுடன் ஓடி வந்து உதவுவதையும் இந்த பேரிடர் காலம் மீண்டும் நிரூபித்துள்ளது. ஆனால் சீனா அமைதியாக இருப்பதற்கும் காரணங்கள் இல்லாமலில்லை.

அதேநேரம் ஜெய்சங்கரின் இந்தத் திடுதிப்பு விஜயமானது, இலங்கையின் புதிய அரசாங்கத்தையும், வடக்கு-கிழக்கு அரசியல் தரப்புகளையும் ஒரே நேரத்தில் இந்தியாவின் மேலாதிக்கப் பார்வையின் கீழ் கொண்டு வருவதற்கான ஒரு தீர்க்கமான இராஜதந்திர நகர்வாகும்.

பந்து இப்போது சீனாவின் கையில் உள்ளது. ஆனால் இந்தியா தனது பிடியை எக்காரணம் கொண்டும் தளர்த்தத் தயாராக இல்லை என்பதையே ஜெய்சங்கரின் பயணம் ஆழமாகப் பதிவு வெளிப்படுத்;துகின்றது.

இலங்கை அரசியலில் துருவநிலைப்பட்டுள்ள சமூகங்களின் கரிசனைகளுக்கும் இந்தியா முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதை இந்த விஜயம் உறுதிப்படுத்தியுள்ளது. பொருளாதார நெருக்கடியின் போதும், தற்போது பேரிடர் நெருக்கடியின் போதும் இந்தியா காட்டியுள்ள தாராளமயமான போக்கு, சீனாவின் வெறும் ‘முதலீட்டுத் திட்டங்களுக்கு’ அப்பாற்பட்ட ஒரு மனிதாபிமான மற்றும் பாதுகாப்பு அரணாக இந்தியாவை இலங்கையர்கள் பார்க்க வழி வகுத்துள்ளது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்ற தலைவர்களின் மாற்று நகர்வுகளும், சீனாவின் மூலோபாயத் திட்டங்களும் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு சவாலாக அமையாதவாறு ஜெய்சங்கர் ஊடாக டில்லி தனது காய்களை நகர்த்தியுள்ளது.

அந்த வகையில் பார்க்கின்றபோது ஜெய்சங்கரின் விஜயமானது வெறுமனே நிவாரண விஜயம் அல்ல, மாறாக இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை மீண்டும் ஒருமுறை நிலைநிறுத்துவதை உறுதிப்படுத்துவற்கான விஜயம்.

அந்த நகர்வில் இந்தியா வெற்றி பெற்றதா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டியுள்ளது. ஏனென்றால் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 20ஆவது மத்திய குழுவின் உறுப்பினரும், ஷிசாங் தன்னாட்சி பிராந்திய கம்யூனிஸ்ட் கட்சி குழுவின் செயலாளருமான வாங் ஜுன்செங் இறுதியாகச் சந்தித்த ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளரிடத்தில் உடன்பட்ட ஒப்பந்த விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுங்கள் என்று நேரடியாகவே கூறிவிட்டுச் சென்றிருக்கின்றார்.

இந்தக் கூற்றுக்களை அவர் பகிரங்க வெளியில் உரையாற்றுகின்றபோதோ, ஜனாதிபதி அநுரவைச் சந்தத்தபோதே கூறியிருக்கவில்லை. அப்போதெல்லாம் இலங்கையின் மீள் எழுச்சியில் தாம் உடனிருப்போம் என்று தான் கூறியிருந்தார். ஈற்றில் தமது விடயங்களை முன்னகர்த்துமாறு வலியுறுத்திவிட்டுச் சென்றிருக்கின்றார்.

அவ்விதமான நிலைமைகளை பார்க்கின்ற போது இந்தியா தனது பிடியைத் தக்கவைப் பதற்கான நகர்வுகளை விடவும் சீனாவின் எதிர் காலம் குறித்த சிந்தனையும் தீர்க்கமான அழுத்தங்களும் ஒருபடி மேலே தான் உள்ளது. ஆகவே சீனாவின் அடுத்து வருகின்ற நகர்வுகள் ஒற்றைக்காலில் இரைக்காக காத்திருக்கும் கொக்கைப் போன்று தான் இருக்கும். அதுவரையில் இந்தியாவுக்கு சுயகாப்பு வெற்றி தான்.

• • •



# லயன் அறைகள் - காலனித்துவத்தின் எச்சமும் பொருளாதார முடக்கமும்

மருதன் ராம்

இலங்கை மலையக சமூகத்தின் இருநூறு ஆண்டுகால வரலாறு என்பது வெறும் உழைப்பால் மட்டும் செதுக்கப்பட்டது அல்ல; அது தொடர்ச்சியான உரிமைப் பறிப்புகளுக்கும், அதற்கு எதிரான வீரம் செறிந்த போராட்டங்களுக்கும் இடைப்பட்ட ஒரு நீண்ட பயணமாகும். இன்று மலையக மக்கள் எதிர்கொள்ளும் காணி உரிமைப் பிரச்சினை என்பது, காலனித்துவ காலத்தில் தொடங்கி இன்றுவரை தொடரும் ஒரு ஒடுக்குமுறையின் விளைவாகும்.



மலையக மக்களின் காணி உரிமைப் போராட்டத்தை அதன் வரலாற்றுப் பின்னணியில் இருந்து பிரித்துப் பார்க்க முடியாது. அந்த அடிப்படையில், சுதந்திர இலங்கையின் முதல் துரோகம் 1948 குடியுரிமைப் பறிப்பின் ஊடாக மலையக மக்களுக்கு இழைக்கப்பட்டது. குடியுரிமை பறிக்கப்பட்டதன் மூலம், அவர்கள் இந்த மண்ணின் குடிமக்கள் என்ற அங்கீகாரத்தை இழந்தனர்.



நில உரிமை என்பது குடியுரிமையோடு பிணைக்கப்பட்ட ஒன்று என்பதால், அவர்கள் சட்டபூர்வமாக நிலமற்றவர்களாக்கப்பட்டனர். அதேபோன்று காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட போது, ஒரு தொழிலாளி குடும்பத்திற்கு 20 பேர்ச் காணி வீட்டுரிமைக்காக ஒதுக்க முடியும் என விதியிருந்தும், அது நடைமுறைப் படுத்தப் படவில்லை.

மாறாக, ‘லயன்’ என்ற குறுகிய அறைகளுக்குள்ளேயே அவர்கள் முடக்கப்பட்டனர். லயன் குடியிருப்புகள் என்பது வெறும் இட நெருக்கடி மட்டுமல்ல, அது ஒரு சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியை முடக்கும் கருவியாகும்.



தோட்ட நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நிலத்தில் வசிப்பதால், மக்கள் தங்களுக்குத் தேவையான ஒரு சிறு பயிரைக் கூடச் செய்ய முடியாத நிலையில் உள்ளனர். இது சுதந்திரம் பெற்ற இலங்கையில் சுதந்திரம் இல்லாத மக்களாக அவர்கள் வாழ்வதற்கு நிர்ப்பந்தித்துள்ளது. நில உரிமை இல்லாததால், வங்கிக் கடன்கள் பெற முடியாமலும், நிரந்தர முகவரி இல்லாமலும் இளைஞர்கள் மாற்றுத் தொழில்களுக்குச் செல்வதில் பாரிய சவால்களை எதிர்கொள்கின்றனர். இது தலைமுறைச் சுழற்சியாக அரங்கேறும் ஒரு அநீதியாகும்.

## தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடான வெளிச்சம்

அரசாங்கத் தரப்பில் ‘பாதுகாப்பான காணிகள் இல்லை’ என்ற வாதம் முன்வைக்கப்பட்டாலும், தரவுகள் வேறு உண்மையைச் சொல்கின்றன. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக பெறப் பட்ட தரவுகளின் படி பிராந்திய பெருந் தோட்ட நிறுவனங்களிடம் (RPCs) 6,320.79 ஹெக்டேயர் பயிரிடப்படாத, உபயோகமற்ற காணிகள் உள்ளன. இது நிலப் பற்றாக்குறை அல்ல, மாறாக உழைக்கும் மக்களுக்கு நிலத்தை வழங்க மறுக்கும் ‘அரசியல் விருப்பமின்மை’ ஆகும். மறுபுறம் இயற்கை அனர்த்தங்கள் மலையக மக்களின் நில உரிமையை மேலும் சிக்கலாக்குகின்றன.



இலங்கையின் அனர்த்தங்களின் போதான இடப்பெயர்வில் 86.41% மலையக மாவட்டங்களிலேயே நிகழ்கிறது. மண் சரிவு போன்ற காரணங்களைக் காட்டி மலையக மக்களை வடக்கு, கிழக்கு மாகாணங் களுக்கு இடம்பெயரச் செய்வது, அவர்களின் அரசியல் செறிவைச் சிதைக்கும் ஒருதந்திர மாகவே பார்க்கப்படுகிறது. குறிப்பாக நுவ ரெலியா மாவட்டத்தில் 50% க்கும் அதிக மான மக்கள் தொகை கொண்ட இச்சமூகம் சிதறடிக்கப்பட்டால், அவர்க ளின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் கேள்விக் குறியா கும் என்ற வாதமும் அரசியல் ரீதியாக முன்வைக் கப்படுகிறது.



எவ்வாறாயினும் மலையகத் தலைமைகளின் போராட்டங்களுக்குச் சமீபகாலமாக வடக்கு-கிழக்கு அரசியல் தலைமைகளிடமிருந்து ஆதரவு பெருகிவருகிறது. மலையகப் பெருந்தோட்ட மக்கள் வசிக்கும் ‘லயன்’ குடியிருப்புகள் அவர்களின் வாழ்வியலில் எதிர்காலத்தில் ஏற்படுத்தப்போகும் தாக்கங்கள் மிகவும் பாரதூரமானவை.



குறிப்பாக, “லயன்” என்பது உழைப்புக்காக முடக்கப்பட்ட ஒரு தற்காலிக இடமாகவே இன்னும் பார்க்கப்படுகிறது. இது எதிர்காலச் சந்ததியினரிடையே ஒரு ‘தாழ்வு மனப்பான்மையை’ உருவாக்குகிறது. உண்மையில் இது ஒரு அடையாள சிதைப்பாகும். ஒரு சிறிய அறைக்குள் முழு குடும்பமும் வசிப்பதால், இளம் பருவத்தினர் மற்றும் முதியவர்களின் தனிமனித சுதந்திரம் பாதிக்கப்படுகிறது.

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# தமிழீழம்: கனவல்ல எதார்த்தம்!

ஆதி
சட்டவாளர்- தமிழ் நாடு

தமிழீழ விடுதலைப் போராட்டம் 2009 மே மாதத்துடன் முடிவடைந்தது என்ற பார்வை, வரலாற்றை மேற்பரப்பாக மட்டுமே வாசிக்கும் அணுகுமுறையின் விளைவு. உண்மையில் 2009 மே ஒரு முடிவு அல்ல; அது ஒரு வடிவ மாற்றம். தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒரு புதிய வரலாற்று கட்டத்தில், புதிய அரசியல் சூழலில், புதிய எதார்த்த நிலையை அடைந்து பயணம் செய்யத் தொடங்கிய தருணமே அது. ஆயுத களத்தில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் அங்கிருந்து நின்று விடவில்லை; மாறாக உலக சூழலுக்கு ஏற்ப தன்னைத் தகவமைத்துக் கொண்டு, அரசியல், ராஜதந்திர, தகவல் போர், மக்களின் உளவியல் அரங்குகள் என வேறு தளங்களில் தொடர்ந்து இயங்கி வருகிறது.






2009 வரை தமிழீழ விடுதலைப் போராட்டத்தை விடுதலைப் புலிகள் நேரடியாக களத்தில் தலைமை ஏற்று நடத்தினர். இன்று ஆயுதம் இல்லாத நிலையில் அந்தத் தலைமைத்துவம் இல்லை என்று தோன்றலாம். ஆனால் நுட்பமான உண்மை என்னவென்றால், தற்காலத்திலும் அந்த விடுதலைப் போராட்டத்தின் அரசியல் தலைமையை புலிகளே வகித்து வருகிறார்கள். இது வெளிப்படையான கட்டளை வழங்கும் தலைமையல்ல; வரலாற்றுச் சட்டகங்களை நிர்ணயிக்கும் தலைமையாகும். முன்னர் புலிகள் தங்கள் பௌதிக இருப்பின் மூலம் வரலாற்றுச் சக்கரத்தை நகர்த்தினார்கள். இப்போது அந்தச் சக்கரத்தை நகர்த்துவது அவர்களின் நினைவுகளும், இலட்சிய வரலாறும் ஆகும். இதுவே 2009க்கு பிந்தைய தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மைய எதார்த்தம்.



2009 வரை நிலவிய அமெரிக்க தலைமையிலான ஒருதலைப்பட்ச உலக ஒழுங்கு இன்று அதன் அந்திமக் காலத்தை நோக்கி நகர்கிறது. உலகளாவிய அரசியல் அதிகார சமநிலைகள் சிதைந்து கொண்டிருக்கின்றன. தெற்காசியப் பிராந்தியத்திலும் அடிப்படை மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. குறிப்பாக இந்தியாவின் பிராந்திய அரசியல் வகிபாகம் இன்று பல திசைகளிலிருந்து சவால்களை எதிர்கொள்ளும் நிலையில் உள்ளது. இந்தச் சூழலில், 2009க்கு பிறகு சர்வதேச அரசியல் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒரு அரசியல் உரிமை கோரிக்கையிலிருந்து கீழிறக்கி, அதை வெறும் மனித உரிமை சிக்கலாக வடிவமைத்து வந்தது. விடுதலை என்ற அரசியல் கோரிக்கை, நிவாரணம், மறுவாழ்வு, நல்லிணக்கம் என்ற சொற்களுக்குள் சுருக்கப்பட்டு, தமிழர்களுக்கு தொடர்ச்சியானஅரசியல்அநீதி இழைக்கப்பட்டது.



இந்த நிலைமையின் பின்னணியில், ஹமாஸின் பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் உலக அரசியல் விவாதத்தில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இசுரேலுடன் நெருங்கிய உறவுகளை பேணும் மேற்குலக நாடுகளே, பாலஸ்தீன விடுதலை குறித்து பேச வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். ஓயாத மக்களின் ஒன்றுபட்ட போராட்டங்கள், மேற்குலக அரசுகளின் மீது பெரும் அரசியல் சுமையை ஏற்படுத்தி வருகின்றன. "ஹமாஸ் இல்லாத பாலஸ்தீனம்" என்ற கோட்பாடு நடைமுறையில் தோல்வியடைந்துள்ளது. உலகின் புலனாய்வு அரசன் எனப் புகழப்படும் இசுரேல் அரசையே, மக்களின் ஒழுங்கமைக்கப்பட்ட ஒன்றுபட்ட போராட்டம் அரசியல் ரீதியாக கடும் நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது.

இதிலிருந்து வெளிப்படும் முக்கியமான அரசியல் உண்மை என்னவென்றால், விடுதலைப் போராட்டங்களில் சம்பிரதாய பூர்வமான, அரசியல் நோக்கமற்ற ஒற்றுமை நீடிக்காது. உணர்வு பூர்வமானதும், அரசியல் ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்டதும் ஆன ஒற்றுமை மட்டுமே, எந்த அரசுகளாலும் வீழ்த்த முடியாத மாபெரும் அரசியல் ஆயுதமாக மாறுகிறது. இதை அரச நிறுவனங்கள் நன்றாகவே அறிந்துள்ளன. அதனால் தான் மக்களின் ஒற்றுமையை உடைப்பதே அரசுகளின் முதன்மை அரசியல் பணியாக மாறியுள்ளது.

2009 மே மாதத்திற்குப் பிறகு, இலங்கை, சர்வதேச மற்றும் பிராந்திய அரசுகள் இந்தப் பணியை திட்டமிட்ட முறையில் தொடங்கி தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றன. தமிழ் மக்களின், செயற்பாட்டாளர்களின், ஆதரவாளர்களின் ஒற்றுமையே முதலில் இலக்காக்கப்பட்டது. இந்த ஒற்றுமையை காத்து, அரசியல் ஆயுதமாக மாற்றிய வரலாறே விடுதலைப் புலிகளின் வரலாறு. மக்களின் அரசியல் ஆயுதமாகவும், போராட்டத்தின் அடையாளமாகவும் புலிகளின் வரலாறே செயல்படுகிறது.



புலிகளின் வரலாறு வெறும் நினைவாக இல்லை. அது அரசியல் எல்லைகளை நிர்ணயிக்கும் ஒரு செயல்மிக்க சக்தியாக உள்ளது. தமிழீழம் பிறக்கும் வரை, புலிகளின் இலட்சிய வரலாறே அரசியல் தலைமையை வகிக்கும் இந்த நினைவு அரசியல், தன்னை பௌதிக அரசியல் வடிவமாக மாற்றிக் கொள்ளும் தருணத்தில், தமிழீழம் தவிர்க்க முடியாத ஒன்றாகவும், வரலாற்றுத் தேவையாகவும் மாறும்.புதிய ஆண்டின் முதன்மையான அரசியல் கடைமை இதுவன்றி வேறெல்ல

• • •

### 17 வது மகாநாடு.. . தொடர்ச்சி ...

அம்பாறை மாவட்டத்தில் 34 சிறிய கைத்தொழில் மையங்களில் 41 பேரும், 7 நடுத்தரக் கைத்தொழில் மையங்களில் 145 பேரும், 13 பாரிய கைத்தொழிற் சாலைகளில் 4,468 பேரும் நேரடியாக இணைக்கப்பட்டிருக்கின்றனர்.

திருகோணமலையில் கப்பல் துறையில் 50 ஏக்கர் விஸ்தீரணக் கைத்தொழிற் பேட்டையில் 08 நிறுவனங்கள் செயற்படுகின்றன. இங்கு 851 பேர் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர். இதே போல் மட்டக்களப்பில் திராய்மடு கைத்தொழில் பேட்டை 24 ஏக்கர் நிலத்தில் செயற்படுகிறது. இங்கு 07 நிறுவனங்கள் செயற்படுவதுடன் 300 வரையான பணியாளர்கள் வேலை பெற்றுள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் நவகர்புர கைத்தொழிற் பேட்டை 20 ஏக்கர் விஸ்தீரணத்தில் செயற்படுகிறது. இங்கு 07 நிறுவனங்கள் செயற்படுவதுடன் 45 பேர் நேரடி வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

கடந்துபோகும் 2025 ல் கிழக்குமாகாணத்தின் நிலை இதுதான் இனி பிறக்கப்போகும் 2026ல் ஏது நடக்கும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.



# உலகின் படைத்துறை, பொருளாதார சமநிலையை மாற்றியமைத்த ஆண்டு

வேல்ஸில் இருந்து அருஸ்

உலக அரங்கில் நெருக்கடியில் சிக்கிய 2024 ஆம் ஆண்டை மேலும் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டு செல்கின்றது இந்த ஆண்டு. 2025 ஆம் ஆண்டு. மோதல்கள், பொருளாதார நெருக்கடிகள், இராஜ தந்திர நெருக்கடிகள் வலுவடைந்து அமெரிக்கா தலைமையிலான உலக ஒழுங்கின் முடிவின் தெளிவை உணர்த்தியுள்ளது.



ஏற்கனவே போரினுள் வீழ்ந்த உக்ரைன் - ரஸ்யா மற்றும் இஸ்ரேல் - பாலஸ்தீன போர் களுக்கு அப்பால் மேலும் பல போர்களை சந்தித்த ஆண்டு இந்த ஆண்டு. அந்த போர்கள் நிறுத்தப்பட்டாலும் அவை முற்றான சமாதா னத்தை கொண்டுவரவில்லை என்பதால் மீண்டும் வெடிக்கும் சாத்தியங்களே உள்ளன.

இரண்டாவது தடவையாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்றம்பின் பதவியேற்பு என்பது உலகின் சமநிலையில் கடுமையான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. கனடாவையும், கிறீன்லாந்தையும் அமெரிக்காவின் மாநிலமாக அறிவித்ததும், ஏறத்தாழ 90 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு அதிக வரிகளை அறிவித்ததும் பொருளாதாரத்தை ஆட்டம் காண வைத்திருந்தது.



பனாமா கால்வாய் மீதான கட்டுப்பாடுகள், புவி வெப்பமாதலைத் தடுக்கும் பாரீஸ் உடன் பாடு, உலக சுகாதார நிறுவனத்தில் இருந்தான வெளியேற்றம், அமெரிக்காவின் உதவி நிறுவ னமான யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் நிறுத்தம், அமெரிக்கா வரும் குடியேற்றவாசிகள் மீதான கட்டுப்பாடுகள், போதைப்பொருள் மையங்கள் மீதான கடும்போக்கு, அமெரிக்காவில் உள்ள கூட்டாட்சி நிறுவனங்களின் சுயாதீன தன்மையின் முடிவு, பணியாளர்களை குறைத்தல் என அமெரிக்காவின் விடுதலை தினத்தை அவர் அறிவித்திருந்தார்.

நேட்டோ கூட்டமைப்பு நாடுகள் தங்கள் பாதுகாப்புக்கு உள்நாட்டு உற்பத்தியில் 5 விகிதத்தை அளிக்கவேண்டும் என்ற நிபந்தனையும் கூட்டணிக் குள் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. உலகில் இந்த ஆண்டு ஏற்பட்ட 8 போர்களை முடிவுக்கு கொண்டுவந்ததாக அவர் அறிவித்த போதும் அவர் எதிர்பார்த்த அமைதிக்கான நோபல் பரிசு அவருக்கு கிடைக்கவில்லை. வழமைபோல வெனிசுலாவில் ஒரு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத் தும் ஆயுதமாக அது எதிர்க்கட்சித் தரைவர் மச் சோடாவுக்கு வழங்கப்பட்டிருந்தது.



அமெரிக்காவின் இந்த மாற்றங்களுக்கு அப்பால் உக்ரைன் - ரஸ்ய போர் மிகவும் தீவிர மான கட்டத்தை எட்டி வருகின்றது. உக்ரைன் படையினர் முற்றாக வீழும் நிலை ஒன்று உருவாகி வருவதுடன், நேட்டோ கூட்டமைப்பின் உதவிகள் இன்றி அவர்களால் தாக்குப்படிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அந்த போரை நிறுத்துவதற்கு அலஸ்க்காவில் ட்றம்பும் - பூட்டீனும் சந்தித்து பேசினாலும் அது வெற்றிபெறவில்லை.

காசா மீது இஸ்ரேல் கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொண்ட தாக்குதல்களும் இந்த ஆண்டு ஒரு போர் நிறுத்தத்தின் மூலம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டாலும், அது முற்றாக நிறுத்தப்படாமல் தொடர்கின்றது. இஸ்ரேலின் அகண்ட இஸ்ரேல் என்ற கொள்கையால் ஏற்பட்ட மோதல்கள் சிரியாவில் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது அல்லாது, அமெரிக்காவினால் பயங்கரவாதி என அறிவிக்கப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ் குழுவின் ஒரு தலைவர் அரசதலைவராக மேற்குலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டதும் அவர் இரண்டு தடவை அமெரிக்கா சென்றதும், மேற்குலக நாடுக ளின் இரட்டைப் போக்கை அம்பலப்படுத்த போதுமானதாக இருந்தது. மேலும் இந்த மோதல்கள் ஏமனின் குதீஸ் அமைப்பினர் மீதான தாக்குதல்களாக விரிவடைந்தது, அது செங்கடலின் போக்குவரத்தையும் முடக்கி உலகின் பொருளாதாரத்திற்கு கடும் சேதங்களை ஏற்படுத்தி யிருந்தது.



லெபனான் மீதான இஸ்ரேலின் போர் அங்கு ஹிஸ்புல்லாக்களின் தலைமைப்பீடத்தை அழித்திருந்தது, அதேசமயம், ஈரானின் படைத் தலைமைப்பீடம், மற்றும் அணுவிஞ்ஞானிகள் மீதான இஸ்ரேலின் தாக்குதல் ஈரானுக்கும் - இஸ்ரேலுக்கும் இடையிலான 12 நாள் போராக மாற்றம் பெற்றிருந்தது. இந்த போரில் ஈரானின் அணு உலைகள் மீது அமெரிக்கா தாக்குதல்களை மேற்கொண்டிருந்தாலும், கட்டாரில் உள்ள அமெரிக்காவின் வளைகுடா பிராந்திய கட்டளை மையம் மீதான ஈரானின் தாக்குதல் அந்த போரை முடிவுக்கு கொண்டுவந்திருந்தது.



இந்த போரிலும் சரி, உக்ரைன் போரிலும்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்



# 2025ம் ஆண்டில் உலகம் சந்தித்த மிக முக்கிய 10 நிகழ்வுகள்

தமிழில்: ஜெயந்திரன்

## பகுதி 1

இந்த ஆண்டு *(2025)* பிறந்த பொழுது, கடந்த ஆண்டை விட *(2024)* இந்த ஆண்டு நம்பிக்கையைத் தருகின்ற ஆண்டாக மலரும் என்ற எதிர்பார்ப்பை வளர்த்தவர்களுக்கு ஏமாற்றத்தைத் தருகின்ற ஓர் ஆண்டாகவே இந்த ஆண்டு அமைந்திருக்கிறது. பன்னாட்டு ரீதியிலான கூட்டுறவு என்ற விடயத்தை உற்றுநோக்குகின்ற பொழுது கடந்த *12* மாதங்களும் சவாலான மாதங்களாகவே அமைந்திருக்கின்றன. இதற்கான காரணம் என்னவென்றால் நாடுகளுக்கு இடையேயான போர்களும் மோதல்களும் இந்த ஆண்டில் மேலும் அதிகரித்திருப்பதுடன் அமெரிக்காவால் வழி நடத்தப்படும் உலக ஒழுங்கு ஒரு முடிவுக்கு வந்திருப்பது முக்கியமான விடயமாகும். கடந்த ஆண்டை *(2024)* மீட்டுப்பார்க்கின்ற பொழுது அழகிய பாரிஸ் மாநகரமும் அங்கே நடைபெற்ற கண்ணைக் கவரும் வண்ண நிகழ்வுகளைத் தன்னகத்தே கொண்ட பன்னாட்டு ஒலிம்பிக் போட்டியும் நாடுகளுக் கிடையேயான கூட்டுறவின் பலத்தை காட்சிப்படுத்தியது. இங்கே நாம் குறிப்பிடும் நிகழ்வுகள் தொடர்ந்து *2026*ம் ஆண்டிலும் தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றன.

### 10. கம்போடியாவுக்கும் தாய்லாந்துக்கும் இடையே ஏற்பட்ட மோதல்



ஒரு நாடு மற்றைய நாட்டை விடப் பெரிதாக இருந்தாலும் அல்லது மற்றைய நாட்டை விட அதிக வளங்களைக் கொண்டிருந்தாலும் அது மற்றைய நாட்டின் தாக்குதலுக்கு உள்ளாக மாட்டாது என்று எந்தவிதத்திலும் கூறிவிட முடியாது. கடந்த ஜூலை மாதத்தில் கம்போடியாவுக்கும் தாய்லாந்துக்கும் இடையே நடைபெற்ற மோதல் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு ஆகும். பதினேழு *17* மில்லியன்களுக்கு சற்று அதிகமான சனத்தொகையைக் கொண்ட கம்போடியா அதன் அயல்நாடான அதனைவிட நான்கு மடங்கு அதிக சனத்தொகையைக் கொண்ட தாய்லாந்துடன் ஒப்பிடும் பொழுது சிறியதும் இராணுவ ரீதியாகப் பலவீனமான நாடும் ஆகும்.

இந்த ஆண்டின் ஜூலை மாதத்தில் இரு நாடுகளுக்கும் இடையே நடைபெற்ற போர் அந்த இருநாடுகளுக்கும் நூற்றாண்டு காலமாக நீடித்த எல்லை முரண்பாட்டின் ஒரு வெளிப்பாடு ஆகும். குறிப்பிட்டுச் சொல்வதாயின் இரண்டு நாடுகளையும் பிரிக்கின்ற அடர்ந்த காடுகள் நிறைந்த டாங்கிறெக் மலைத்தொடரின் உச்சியில் அமைந்திருக்கின்ற "பிறாசாட் ரா முவென் தொம்" என்ற மிகவும் புராதனமான ஆலயத்துக்கு இரண்டு நாடுகளுமே சொந்தம் கொண்டாடுகின்றன. இரண்டு பக்கத்து எல்லைகளுக்கும் இடையே நிலவுகின்ற சிக்கலான உள்நாட்டு அரசியல் இப்போது வெளிப்படையான ஒரு மோதலுக்குக் காரணமாக அமைந்திருக்கிறது. தொடக்கத்தில் நடைபெற்ற மோதலில் பலர் கொல்லப்பட்டதோடு பல்லாயிரக்கணக்கான மக்கள் இடப்பெயர்வுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

சண்டையை முடிவுக்குக் கொண்டுவராவிட்டால், இரண்டு நாடுகளுடனும் தாம் மேற்கொள்ளும் வர்த்தக நடவடிக்கைகளை நிறுத்தப் போவதாக அதிபர் ட்ரம்ப் இரு நாடுகளுக்கும் அச்சுறுத்தல் விடுத்தார். இதன் காரணமாக பெரிய விருப்பமின்றி இரண்டு நாடுகளும் போர்நிறுத்தம் ஒன்றுக்கு உடன்பட்டன. மலேசியாவின் கோலாலம்பூர் பெருநகரத்தில் ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற ஆசியான் உச்சிமாநாட்டின் பொழுது ஓர் உத்தியோகபூர்வமான ஒப்பந்தம் ஒப்பமிடப்பட்டது. இருப்பினும் ஒப்பந்தம் நீடிக்கவில்லை. நவம்பர் மாதத்தில் நிலக்கண்ணி வெடி வெடித்ததனால் தாய்லாந்தைச் சேர்ந்த நான்கு சிப்பாய்கள் கொல்லப்பட்டார்கள்.

இதன் காரணமாக பாங்கொக் ஒப்பந்தத்தின் சில பகுதிகளை செயலிழக்கச் செய்தது. கம்போடியா விலுள்ள சில இலக்குகள் மேல் இம் மாதத்தின் தொடக்கத்தில் தாய் விமானங்கள் குண்டுவீச்சுகளை முன்னெடுத்த பொழுது மோதல் இன்னும் தீவிரமடைந்தது. தாய்லாந்தின் முன்னைய பிரதம மந்திரி கம்போடியாவுடன் மென்மைப் போக்கைக் கடைப்பிடித்ததற்காக பதவியிலிருந்து நீக்கப்பட்டார். போர் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்றால் தாய்லாந்து முன்வைத்த விடயங்களை கம்போடியா உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தாய்லாந்தின் தற்போதைய பிரதம மந்திரி எச்சரிக்கை விடுத்தார். எனவே இரு நாடுகளுக்கும் இடையே போர் தொடர்ந்து நடைபெறுவதற்கான வாய்ப்புகளே அதிகமாக இருக்கின்றன.

### 9. கர்தினால் றொபேட் பிறெவோஸ்ற் 14வது லியோ என்ற பெயரில் திருந் தந்தையாகிறார்



றோமன் கத்தோலிக்க திரு அவையின் திருத்தந்தையர்களாக இதுவரை *267* பேர் இருந்திருக்கின்றனர். ஆனால் வரலாற்றில் வட அமெரிக்காவிலிருந்தும் ஐக்கிய அமெரிக்கா விலிருந்தும் யாருமே திருத்தந்தையாக நியமிக் கப்படவில்லை. இவ்வருடம் மே மாதத்தில் அவ்வாறான நிலைமை ஒரு முடிவுக்கு வந்தது. ஏப்பிரல் மாதம் *21*ம் திகதி ஏற்கனவே நோயுற்றிருந்த திருத்தந்தை பிரான்சிஸ், பக்கவாத நோயால் பீடிக்கப்பட்டு இறப்பைத் தழுவினார். சரியாகப் பன்னிரண்டு வருடங்கள் திருத்தந்தையாக அவர் பணிபுரிந்தார். இதனைத் தொடர்ந்து றோமன் கத்தோலிக்க திரு அவை ஓர் இடைக்கால ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. ஓர் புதிய திருத்தந்தை தேர்ந்தெடுக்கப்படும் வரை இவ்வாறான இடைக்கால ஆட்சி தொடர்வது வழக்கம்.

பல நூற்றாண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வரும் பாரம்பரியத்துக்கு ஏற்ப கொண்கிளேவ் *(Conclave)* என அழைக்கப்படும் புதிய திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் நிகழ்வுக்காக அதில் பங்குபெறும் தகுதிபெற்ற *133* கர்தினால்கள் உரோம் நகரில் ஒன்றுகூடினார்கள். முதல் மூன்று தடவைகள் அளிக்கப்பட்ட வாக்களிப்புகளைத் தொடர்ந்து வத்திக்கானின் சிம்னியிலிருந்து கறுப்புப்புகை வெளியேற்றப்பட்டது. அதன் பொருள் என்னவென்றால் புதிய திருந்தந்தை தெரிவுசெய்யப்படவில்லை என்பதாகும்.

நான்காவது தடவை மேற்கொள்ளப்பட்ட வாக்களிப்பைத் தொடர்ந்து வெள்ளைப் புகை வெளிவந்தது. கொண்கிளேவ் கர்தினால் றொபேட் பிறெவோஸ்ட் *(Robert Prevost)* அவர்களைத் திருத்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

**2025ம் ஆண்டில் . . . தொடர்ச்சி . . .**

தந்தையாகத் தெரிவுசெய்திருந்தது. சிக்காகோ நகரின் தென்பகுதியில் பிறந்து, அங்கேயே வளர்ந்த புதிய திருத்தந்தை வில்லாநோவா பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்தார். இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் புதிய திருத்தந்தை தென்னமெரிக்காவின் பெருநாட்டில் ஒரு மறைபரப்பாளராகப் பணியாற்றியபின் இறுதியில் சிக்கிளாயோ மறைமாவட்டத்தின் திருத்நதந்தையாகப் பணியாற்றினார். 2023ம் ஆண்டில் புதிய ஆயராகப் தெரிவு செய்யும் சபையில் பணியாற்றுவதற்காக அவர் உரோமாபுரிக்கு அழைக்கப்பட்டுத் தொடர்ந்து கர்தினால் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

1244ம் ஆண்டில் தாபிக்கப்பட்ட புனித அகுஸ்தீனார் துறவறசபையைச் சார்ந்த முதல் திருத்தந்தையாக திருத்தந்தை லியோ திகழ்கிறார். திருத்தந்தையாகத் தெரிவுசெய்யப்பட்ட பொழுது 14வது லியோ என்ற பெயரைத் திருத்தந்தை தேர்ந்துகொண்டார். தொழிலாள வர்க்கத்தின் நிலைமை சீர்திருத்தப்படவேண்டும் என்ற அழைப்பை விடுத்த றேறும் நோவாறும் (Rerum Novarum) என்று சுற்றுமடலை எழுதிய திருத்தந்தை 13வது லியோ அவர்களை கர்தினால் றொபேட் பிறெவோஸ்ற் அவர்கள் நினைவுகூர விரும்பினார்.

## 8. இந்திய-பாகிஸ்தான் மோதல்

“காஷ்மீரே உலகத்திலே மிகவும் ஆபத்தான இடம்” என்று 2000ம் ஆண்டில் அதிபர் பில் கிளின்ரன் குறிப்பிட்டிருந்தார். இக்குறிப்பிட்ட பிராந்தியம் தொடர்பாக இந்திய - பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளுக்கும் இடையே உள்ளுக்குள் புகைந்துகொண்டிருந்த பிரச்சினைகள் மேமாதத்தில் போராக வெடித்தது. அதற்கு இரு வாரங்களுக்கு முன்னர், இந்திய நிர்வாகத்துக்கு உட்பட்டிருந்த ஜம்மு காஷ்மீர் பிரதேசத்தில் பஹல்கம் என்ற இடத்தில், 5 பயங்கரவாதிகள் 26 பொது மக்களைக் கொலைசெய்திருந்தார்கள்.

பாகிஸ்தானைத் தளமாகக் கொண்ட லஷ்கர் ஈ தொய்பா என்ற பயங்கரவாத இயக்கம் 2008ம் ஆண்டில் மும்பாயில் ஒரு தாக்குதலைத் தொடுத்து, 175 அப்பாவிப்பொதுமக்களைக் கொன்றிருந்தனர். மேற்குறிப்பிட்ட இயக்கத்தின் துணையோடே இவ்வருடம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடத்தப்பட்டதாக நம்பப்பட்டது. 2008ம் ஆண்டில் இந்தியா பதில் தாக்குதல் எதனையும் மேற்கொள்ள வில்லை.



ஆனால் இம்முறை பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகளின் உட்கட்டமைப்பு மீது தாக்குதலைத் தாம் மேற்கொண்டதாக இந்தியா அறிவித்தது. இந்தியாவின் தாக்குதலுக்குப் பதிலளிக்கும் விதமாக பாகிஸ்தான் ஆளில்லா விமானங்களையும் ஏவுகணைகளையும் கொண்டு இந்திய இராணுவத் தளங்களுக்கு எதிராகத் தாக்குதல்களை மேற்கொண்டது மட்டுமன்றி, இந்தியாவின் அதிநவீன குண்டுவீச்சு விமானங்கள் இரண்டைத் தாக்கியழித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து லாகூர் நகரில் அமைந்திருந்த வான்வெளிப்பாதுகாப்பு ஒழுங்கமைப்பின் மீது இந்தியா தாக்குதலை மேற்கொண்டிருந்தது. அரைநூற்றாண்டு காலத்தில் நடைபெற்ற மிகப்பெரிய மோதலில் இரண்டு நாடுகளில் எதுவுமே குறிப்பிடத்தக்க இராணுவ வெற்றியைப் பெற்றிருக்கவில்லை. மூன்று நாட்களுக்குப் பின் ஒரு போர்நிறுத்தத்துக்கு இரு நாடுகளும் உடன்பட்டன. தானே போர்நிறுத்த உடன்படிக்கையை மேற்கொள்வதற்கான நடவடிக்கையை எடுத்ததாக அதிபர் ட்ரம்ப் உரிமை கோரினார்.

பாகிஸ்தான் இராணுவத் தளபதியான ஆசம் முனீர் இதனை உறுதிப்படுத்தியிருந்தார். இதனை நரேந்திர மோடி நிராகரித்திருந்தார். இந்தப் போரின் காரணமாக இந்திய அமெரிக்க உறவில் விரிசல் ஏற்பட்டது. தனது மத்தியஸ்த முயற்சியை மோடி ஏற்றுக்கொள்ளத் தவறியதற்காக இந்திய ஏற்றுமதிப் பொருட்கள் மீது மிக அதிக வரிகளை ட்ரம்ப் விதித்தார். 1960ம் ஆண்டில் இரு நாடுகளுக்கும் இடையே ஒப்பமிடப்பட்ட இந்து தண்ணீர் ஒப்பந்தத்திலிருந்து விலகி, இந்து ஆற்றுத்தொகுதியிலிருந்து பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் தண்ணீரை இந்தியா நிறுத்துமா? என்பது தான் தற்போது உள்ள கேள்வியாகும். பாகிஸ்தானின் 80 வீதமான பண்ணைகள் இந்தத் தொகுதியிலிருந்தே தமக்கான நீர் விநியோகத்தைப் பெற்றுக்கொள்கின்றன.

## 7. தீவிரமடையும் செயற்கை நுண்ணறிவுப் போட்டி

‘செயற்கை நுண்ணறிவு விடயத்தில் யார் வெற்றிபெறுகிறார்களோ அவர்களே உலகை ஆள்வார்கள்’ என்று 2017ம் ஆண்டில் ரஷ்ய அதிபர் விளாடிமீர் புட்டின் தெரிவித்திருந்தார். ஒருவேளை அவர் சொன்னது தவறு என்பதை வரலாறு நிரூபிக்கக்கூடும். ஆனால் தற்போதைய நிகழ்வுகளைக் கண்ணோக்கும் பொழுது புட்டின் சொன்னது சரிபோலத் தெரிகிறது.



செயற்கை நுண்ணறிவுத் தளத்தைப் பொறுத்தவரையில், தற்போது அமெரிக்காவும் சீனாவும் மட்டுமே முன்னணியில் திகழ்கின்றன. வேறு எந்த நாடும் இவற்றை நெருங்க முடியவில்லை. “டீப்சீக்” (DeepSeek) என்ற சீன நிறுவனம் ஜனவரி மாதத்தில் அமெரிக்காவின் மிகச் சிறந்த செயற்கை நுண்ணறிவு மாதிரிகளுக்கு ஒப்பான ஒரு மாதிரியை வெளியிட்டு உலகத்தின் கவனத்தை தன்மீது ஈர்த்திருந்தது.

உயர்தரத்தைச் சேர்ந்த நிவிடியா சிப்பைப் பயன்படுத்தாமலே சீன நிறுவனம் இந்த முயற்சியை மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கதாக இருந்தது. டீப்சீக் தமது வெற்றி தொடர்பாக வெளியிட்ட விடயங்கள் பலவற்றைப் பற்றி நிபுணர்கள் கேள்வி எழுப்பினார்கள். ஆனால் அமெரிக்க நிறுவனங்களோ டீப்சீக்கின் வெற்றியை அடிப்படையாகக் கொண்டு செயற்கை நுண்ணறிவு தொடர்பான தமது முயற்சிகளை இரட்டிப்பாக்கினார்கள்.

செயற்கை நுண்ணறிவை விருத்தி செய்வதில் ‘சிப்’கள் முக்கிய பங்கு வகிப்பதன் காரணத்தால், அமெரிக்காவில் அமெரிக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப் பட்ட அரைக்கடத்திகள் (semiconductors) தொடர்பாக பைடன் நிர்வாகம் ஏற்கனவே விதித்திருந்த கட்டுப்பாடுகளை இன்னும் விரிவாக்க ட்ரம்ப் நிர்வாகம் முதலில் முடிவு செய்திருந்தது. ஆனால் இரண்டு வாரங்களுக்கு முன்னர் தனது முடிவை மாற்றி தனது மிகச் சக்தி வாய்ந்த H200 சிப்களை சீனாவுக்கு விற்பதற்கு ட்ரம்ப் அனுமதி வழங்கினார்.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிப்பதாக ட்ரம்ப் மேல் கடுமையான விமர்சனம் வைக்கப்பட்டது. இந்தப் போட்டிக்குள் ஒரு விடயம் மறைந்திருக்கிறது. செயற்கை நுண்ணறிவு தொடர்பான போட்டியில் மிகச் சிறந்த மாதிரிகளை எந்த நாடு உற்பத்தி செய்வது என்பதல்ல, எந்த நாடு நாளாந்தச் செயற்பாடுகளில் மற்ற விடயங்களோடு செயற்கை நுண்ணறிவை ஒருங்கிணைப்பதில் வெற்றியடைகிறது என்பதாகும்.

இவ்வாறு நோக்கினால் சீனா இந்த விடயத்தில் முன்னணியில் திகழ்கிறது. அதே நேரம் விமர்சகர்கள் முன்வைக்கும் கேள்வி என்னவென்றால், செயற்கை நுண்ணறிவு பொருளாதாரத்தை எவ்வாறு உலுப்புகிறது அல்லது வேலை வாய்ப்புகளை எவ்வாறு இல்லாமல் செய்கிறது என்பதாக அமைகிறது.

## 6.தொடர்ந்து கொண்டிருக்கும் சூடானின் மிக மோசமான உள்நாட்டுப் போர்

“உலக நரகம்” என்று தான் சூடானின் மூன்றாண்டு கால உள்நாட்டுப் போரைச் சித்தரிக்கலாம். அப்டெல் வற்றா அல் பூர்ஹான் தலைமையிலான சூடானின் ஆயுதப் படைகள் மொஹமட் ஹம்டான் ஹெமடெற்றி டகாலோவின் தலைமையிலான விரைவு ஆதரவுப் படைகளுக்குமிடையேயான போராக இந்த மூன்றாண்டு காலப் போர் தொடர்ந்துகொண்டிருக்கிறது. 2021ம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட ஓர் ஆட்சிக்கவிழ்ப்பின் மூலம் இருவரும் ஆட்சியைக் கைப்பற்றினார்கள்.



பின்னர் இருவரும் பிரிந்து தமக்கிடையே சண்டையிடத் தொடங்கினார்கள். இரு சாராரில் எவருமே போரில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றியைப் பெறவில்லை என்பது மட்டுமன்றி சண்டை பல முனைகளில் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. செங்கடலில் அமைந்துள்ள போட் சூடான் என்ற இடத்தையும் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள முக்கிய நகர்களையும் எஸ்ஏஎவ் (SAF) தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுடன் சூடானின் சட்டபூர்வ அரசாகவும் கணிக்கப்படுகிறது. அதே நேரம், ஆர்எஸ்எவ் (RSF) டார்வூர் (Darfur) பெருநகரின் பெரும் பகுதியையும் மத்திய மற்றும் மேற்குச் சூடான் பிரதேசங்களையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.



இரண்டு சாராருக்கும் வெளி நாட்டு ஆதரவு உண்டு. எகிப்து, ரஷ்யா, துருக்கி ஆகிய நாடுகள் எஸ்ஏஎவ்வை ஆதரிக்க, சாட், எத்தியோப்பியா ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவை ஆர்எஸ்எவ்வை ஆதரிக்கின்றன. இந்தப் போரில் பெரிய எண்ணிக்கையான மக்கள் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர். நான்கு இலட்சம் மக்கள் இதுவரை கொல்லப்பட்டிருப்பதுடன், 12

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

### சோதனைகளும் .. . தொடர்ச்சி ...

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் 2025ஆம் ஆண்டு 'அனைத்து நாடுகளுடனும் நட்பு' என்ற கொள்கையின் கீழ் பல வரலாற்றுச் சிறப்பு மிக்க விஜயங்களைக் கண்டது. குறிப்பாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் ஏப்ரல் 4 முதல் 6 வரையிலான காலப்பகுதியிலர் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் மிகவும் முக்கியமானது. இதன்போது, இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையே மன்னார் முதல் தமிழ்நாடு வரையிலான கடல்வழி மின்சார இணைப்பு, திருகோணமலை எரிசக்தி மையம் மற்றும் இலங்கையில் டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்க 'UPI' பணப்பரிமாற்ற முறைமையை அறிமுகப்படுத்துதல் உள்ளிட்ட 10 முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

அத்துடன் மலையகத்தில் மேலும் 10,000 வீடுகளை அமைக்கும் திட்டத்திற்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். இந்திய விஜயத்தைத் தொடர்ந்து, மே மாதம் பிரித்தானிய வெளியுறவுச் செயலாளர் டேவிட் லம்மியும், ஜூன் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கும் மற்றும் நவம்பர் மாதம் அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லூவும் இலங்கைக்கு வருகை தந்து, நாட்டின் மனித உரிமை, பாதுகாப்பு மற்றும் இந்தோ-பசிபிக் பிராந்திய ஒத்துழைப்பு குறித்து விரிவாகக் கலந்துரையாடினர்.

மறுபுறம், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க 2025இல் சீனா (ஜனவரி), வியட்நாம் (மே), ஜேர்மனி (ஜூன்) மற்றும் ஜப்பான் (செப்டெம்பர்) நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொண்டார். செப்டெம்பரில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 80ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்ற அவர், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பைச் சந்தித்து இலங்கையின் கடன் மறுசீரமைப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றங்கள் குறித்து விளக்கமளித்தார். ஆனால் குறித்த சந்தித்து உத்தியோக பூர்வ இருதரப்பு சந்திப்பாக நடைபெற்றிருக்கவில்லை.

பொருளாதார ரீதியாக, செப்டெம்பரில் ஜப்பான் மற்றும் சீனாவின் நிதியுதவியுடன் நிறுத்தப்பட்டிருந்த மத்திய அதிவேக நெடுஞ்சாலைப் பணிகள் (கடவத்தை - மீரிகம) மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதோடு அரசாங்கத்தின் 'கிளீன் சிறிலங்கா' திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட ஊழல் ஒழிப்பு கெடுபிடிகள், கடந்த கால ஆட்சியாளர்களுக்கு எதிரானசட்ட நடவடிக்கைகள் போன்றவை நிர்வாக ரீதியாக பெரும் பரபரப்பை ஏற்படுத்தின.

குறிப்பாக 'மிஸ்டர் கிளீன்' என்று சொல்லப்படுகின்ற முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டுப் பயணமொன்றுக்காக பயன்படுத்திய நிதி தொடர்பில் கைது செய்யப்பட்டமையானது கொழும்பு வாழ் மேல்தட்டு வர்க்கத்துக்கு பாரிய அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது.

ஆண்டின் இறுதியில், நவம்பர் 28 அன்று இலங்கையின் கிழக்குக் கரையைத் தாக்கி, பின்னர் நாடு முழுவதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய 'தித்வா' சூறாவளி ஒரு பாரிய மனிதாபிமான நெருக்கடியை உள்நாட்டில் உருவாக்கியுள்ளது. இச்சூறாவளியால் நாடு முழுவதும் சுமார் 640க்கும் அதிகமானோர் உயிரிழந்ததுடன், 1.6மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாகநுவரெலியாமற்றும்இரத்தினபுரி மாவட்டங்களில் ஏற்பட்ட நிலச்சரிவுகள் கிராமங்களையே துடைத்தெறிந்திருக்கின்றன. இத்தகைய இக்கட்டான சூழலில், இந்தியாவின் 'சாகர் பந்து' நடவடிக்கையின் கீழ் இந்தியக் கடற்படை மற்றும் விமானப்படையினர் விரைந்து வந்து மீட்புப் பணிகளை முன்னெடுத்தனர். புயலின் பாதிப்புகள் தணியாத நிலையில், டிசம்பர்23, 2025 அன்று இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி. எஸ். ஜெய்சங்கர் இலங்கைக்கு வருகை தந்து, பாதிக்கப்பட்ட மக்களின் மறுசீரமைப்புப் பணிகளுக்காக 450 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான பாரிய உதவித் திட்டத்தை அறிவித்துள்ளார். இது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவின் ஆழத்தைப் பிரதிபலிப்பதாக வெளிப்படையில் காணப்படுகின்றது.

ஆனால் இதற்கான பின்னணியைப் பார்க்கின்றபோது இந்தியா இலங்கையில் எந்த வொரு தரப்பினரையும் காலூன்றுவதற்கு இடமளிக்கப்போவதில்லை என்பதை அப்பட்டமாகவே வெளிப்படுத்துவதாகவே உள்ளது. ஆகவே குறித்த விடயத்தில் தீவிரமான கவனம் அவசியமானின்றது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், 2025 ஆம் ஆண்டு என்பது இலங்கை அரசாங்கம் தனது உள்நாட்டு ஊழல் ஒழிப்பு கெடுபிடிகளுக்கும், சர்வதேச இராஜதந்திர விட்டுக்கொடுப்புகளுக்கும் இடையே ஒரு சமநிலையைப் பேண முயற்சித்த ஆண்டாகும்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களில் முன்னேற்றங்கள் ஏற்படுவது போன்று தென்பட்டாலும் நிலையான அரசியல் தீர்வு மற்றும் நீதிக்கான பயணம் இன்னமும் நீண்டதாகவே உள்ளது.

பொருளாதார மீட்சி மற்றும் பேரிடர் மேலாண்மையில் சர்வதேச ஆதரவுடன் இலங்கை நடைபோட்டாலும், மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவு மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவை 2026 ஆம் ஆண்டிற்கான பெரும் சவால்களாக எஞ்சியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவ்விதமான சூழலில் புதிய ஆண்டை முகங்கொடுப்பது மிகவும் அவதானத்துக்கு உட்பட்டதாகும்.

• • •

### தமிழர்களின் ... தொடர்ச்சி ...

வெள்ளம் ஏற்பட்டு அழிவுகளை சந்திக்க வேண்டும் என அவர்கள் நினைத் துக் கூட பார்க்கவில்லை எனவும் விவசாயிகள் தெரிவித்திருந்தனர். விவசாயிகளின் மனநிலையில் மாற்றங்களை கொண்டு வருவதும் பொருத்தமாக இருக்கும் என இவ் வேலையில் ஒரு கனம் சிந்திக்க தூண்டுகிறது.

இது போன்ற பேரிடர் காரணமாக மீள முடியாது ஆறாத் துயரில் பலர் பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கும் நிலையில் பாடசாலை மாணவர்கள் உட்பட சிறுவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

UNICEF இன் 2025.12.05 ம் திகதிய தரவுகளின் அடிப்படையில் மொத்தமாக நாடு தழுவிய ரீதியில் 462,274 சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடு மீண்டும் பழைய நிலையை அடைய சர்வதேச நாடுகளின் உதவி ஒத்தாசைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அனர்த்தங்களில் இருந்து முற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமாக உயிரிழப்புக்களை பாதுகாக்க முடியும்.

பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்காக பல உதவித் தொகைகள் வழங்கப்படுவதாக அரசாங்கம் மூலம் அறிவிக்கப்பட்ட நிலையில், சிலரின் ஆதங்கம் தங்களுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கவில்லை எனவும் நிவாரணங்களை பெற்றுத்தரக்கோரிய போராட்டங்களும் இடம் பெற்றன. இதன் மூலம் ஒரு சம்பவம் அண்மையில் திருகோணமலை மாவட்ட வெருகல் பிரதேச செயலகம் முன் இடம் பெற்றது.

இதில் ஆறு நபர்கள் கைது செய்யப்பட்டனர். குறித்த பகுதி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இரு நாட்களாக பணிப்புறக்கணிப்பையும் மேற்கொண்டிருந்தனர். இதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு அரச சேவைகள் முடங்கி காணப்பட்டன. ஒட்டு மொத்தமாக அப்பாவி மக்கள் பெரிதும் இதன் மூலமாக பாதிக்கப்பட்டனர்.

எனவே தான் பொதுவான நிவாரண இழப்பீடு தொடர்பில் பொறி முறை ஒன்றை வழங்கி பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அவர்களுடன் இணைந்த வாழ்வாதாரங்களை மேம்படுத்தி விரைவில் நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் உறுதிபூண வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

• • •

### இஸ்ரேலிய சிறை .. . தொடர்ச்சி ...

மற்றும் இரவு சோதனைகள். டாமன் சிறையில் உள்ள பெண் கைதிகள் மீதான சோதனைகள், பெண்களை அடித்தல், கட்டுப்பாடுகள்,கண்களை கட்டுதல், குளிரில் நிறக வைத்தல், போர்வைகள் மற்றும் ஆடைகளின் கடுமையான பற்றாக்குறை, சுகாதாரப் பட்டைகள் மறுப்பு மற்றும் பட்டினி" ஆகியவை தினசரி அடக்குமுறையின் வடிவங்கள்," என்று அது விளக்கியுள்ளது.

தனிமைச் சிறைவாசம், மருத்துவ புறக்கணிப்பு மற்றும் சிகிச்சை மறுப்பு, பட்டினி மற்றும் கூட்ட நெரிசல் ஆகியவை அடக்குமுறையின் பிற வடிவங்கள். "குழந்தை கைதிகள் (தோராயமாக 350 உள்ளனர்) மீதும் வன்முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவர்கள் தாக்குதல், பட்டினி, நோய் மற்றும் குடும்பத்தினரை சந்திக்க மறுப்பு ஆகியவற்றிற்கு ஆளாகிறார்கள்" என்று அது கூறியுள்ளது.

இஸ்ரேலிய சிறைகளான ஓஃபர், நெகேவ், மெகிடோ, ரம்லா, ஷட்டா, கில்போவா, கானோட், டாமன் மற்றும் எஸ்டி டீமான் மற்றும் கிலாட் தடுப்பு முகாம்களில் இந்த மீறல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

LENIO
Architectural Planning | Structural Design | Party Wall Agreement
Sadadcharam Easwaran (Easan)
BEng MSc DIC CEng C.BuildE MICE MCABE MFPWS
Director
+44 (0) 20 4558 8272
+44 (0) 7831 199 962
easan@leniogroup.com
www.leniogroup.com
5a St. James's Road
Croydon, CR0 2SB
ice cabe FPWS

### உலகின் படைத்.. . தொடர்ச்சி ...

சரி ஆளில்லாத தாக்குதல் விமானங்களின் பயன்பாடுகள் மேற்குலக நாடுகளின் ஆயுத மேலாண்மையை தகர்த்திருந்தன. இஸ்ரேலின் அயன்டோம் மற்றும் அமெரிக்காவின் பற்றியாட் வான் பாதுகாப்பு தொகுதிகள் அனைத்தும் ஈரானின் ஏவுகணைகள் மற்றும் ஆளில்லாத தாக்குதல் விமானங்களின் முன் செயலற்றவையாக மாறியிருந்தன. அதாவது ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் மற்றும் கடல் கலங்களின் போரியல் பயன்பாட்டின் ஆண்டாகவும், பாரம்பரிய ஆயுதங்களின் தோல்வியின் ஆண்டாகவும் இந்த ஆண்டு கடந்து சென்றுள்ளது.

ஆபிரிக்க பிராந்தியத்தில் மாலி, நைகர், மடகஸ் கர் உட்பட பல நாடுகளில் இராணுவப் புரட்சிகள் மூலம் மேற்குலக சார்பு ஆட்சிகள் கவிழ்க்கப் பட்டுள்ளன. அங்கு ரஸ்யாவினதும், சீனாவினதும் ஆதிக்கங்கள் மேலோங்கி வருவதுடன், பிரான்ஸின் ஆதிக்கமும் முடிவுக்கு வந்துள்ளது.

ஆசியப் பிராந்தியத்தில் தாய்வான் தொடர்பில் சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான முறுகல்கள் அதிகரித்து வந்தாலும், அங்கு இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளை சுற்றி ஒரு பதற்றமாக சூழல் உருவாக்கப்பட்டு அது இந்திய - பாகிஸ்தான் போராகவும் மாற்றம் பெற்றிருந்தது. 5 நாட்கள் இடம்பெற்ற இந்திய பாகிஸ்தான் போரில் இந்திய வான்படையின் 7 முன்னணி போர் விமானங்களை பாகிஸ்தான் சுட்டு வீழ்த்தியதும், இரு நாடுகளுக்கும் இடையில் இடம்பெற்ற ஏவுகணைத் தாக்குதல்களும் பெரும் மோதலாக வெடித்தபோதும், இறுதியில் அமெரிக்க அதிபர் தலையிட்டு அதனை நிறுத்தியிருந்தார்.

இந்த போர் இதுவரைகாலமும் இருந்த இந்தியாவின் படைத்துறை மேலாண்மையை முடிவுக்கு கொண்டுவந்துள்ளது. பாகிஸ்தானின் பின்னனியில் சீனாவின் ஆயுத மேலாண்மை இருந்ததும் உண்மையே. அதேசமயம், 2024 ஆம் ஆண்டு பங்களாதேசத்தில் ஒரு சற்-தலைமுறையின் புரட்சி மூலம் ஆட்சி மாற்றத்தை எற்படுத்திய அமெரிக்கா, இந்த ஆண்டு நேபாளத்திலும் இந்திய, சீனா ஆதரவு பெற்ற பிரதமரான சர்மா ஒலியின் ஆட்சியை அதே புரட்சி மூலம் முடிவுக்கு கொண்டுவந்திருந்தது.

அதேசமயம், தாய்லாந்து - கம்போடியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான எல்லைப் போர்களை அமெரிக்க அதிபர் முடிவுக்குக் கொண்டு வந்தபோதும், அது மீண்டும் ஆரம்பமாகி உக்கிரம் பெற்று வருகின்றது.

மேலும் சீனாவுக்கும் - அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தகப் போர் உச்சம் பெற்ற போதும் அமெரிக்கா இறுதியில் இறங்கிவரவேண்டிய நிலைக்கு சீனா அதனை இட்டுச் சென்றிருந்தது. அமெரிக்க அதிபர் தமது பொருளாதாரத்திற்கு பெரிதும் நம்பியிருந்த செயற்கை நுண்ணறிவையும், சீனாவின் டீப் சீக் செயற்கை நுண்ணறிவு கேள்விக்குறியாக்கி விட்டது. அது மேற்குலகத்தின் தொழில்நுட்பம் சார்ந்த எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கு மிகப்பெரும் சவாலாக மாற்றம் பெற்றுள்ளது.

உக்ரைன் போர் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதாரத்தை கடுமையாக பாதித்துள்ள அதே சமயம், ட்றம்பின் வரி விதிப்புக்களும் ஐரோப்பாவின் பொருளாதாரத்தின் அழிவின் ஆரம்பமாக மாறியிருந்தது.

ஏற்கனவே 37 றில்லியன்களாக மாற்றம் பெற்றுள்ள அமெரிக்காவின் பொருளாதார கடன் சுமை ட்றம்பின் காலத்தில் மேலும் அதிகரித்துள்ளதே தவிர குறையவில்லை. மேலும் உக்ரைன் போரில் உக்ரைனின் தோல்வி ஐரோப்பாவின் படைத்துறை மேலாண்மை மற்றும் நேட்டோவின் நம்பகத்தன்மையை உடைக்கும் நிலையை இந்த ஆண்டின் இறுதியில் எட்டியுள்ளது.

கரிபியன் கடலில் வெனிசுலாவை சுற்றி குவிக்கப்படும் அமெரிக்கப் படைகள், அங்கு சட்டவிரோதமாக அமெரிக்காவினால் கைப்பற்றப்படும் எண்ணெய்க் கப்பல்கள் என்பன அந்த பிராந்தியமும் ஒரு போருக்குள் இழுத்துச் செல்லப் படும் நிலையை தோற்றுவித்துள்ளது.

அதாவது 2024 ஆம் ஆண்டை விட 2025 ஆம் ஆண்டு மிகவும் நெருக்கடிகள் நிறைந்த ஆண்டாகவே கடந்த சென்றுள்ளது. ஆனால் 2026 ஆம் ஆண்டு அதனை குறைக்குமா என்றால் இல்லை என்பதே பதில், இத்தாலிய பிரதமரும்; அதனை தான் தெரிவித்திருந்தார். அதாவது மிகவும் நெருக்கடிகள் மிக்க ஆண்டாக நாம் 2025 ஆம் ஆண்டை பார்த்திருந்தோம் ஆனால் 2026 ஆம் ஆண்டு அதனை விட மோசமாக அமையும் என்பதே அவரின் கருத்து. நடக்கும் சம்பவங்களும் அதனைத் தான் கோடிட்டுக் காட்டுகின்றன.

• • •

### சுனாமி ஆழிப் ... தொடர்ச்சி ...

இந்த நிலையில், இலங்கை யில் 2005ஆம் ஆண்டு முதல் டிசம்பர் மாதம் 26ஆம் திகதி “தேசிய பாதுகாப்பு தினம்” அறிவிக் கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதற்கமைய, தேசிய பாது காப்பு தினம் இன்று காலை 8.30 முதல் முற்பகல் 11 மணி வரை காலியிலுள்ள ஆழிப்பேரலை நினைவிடத்தில் நடைபெற்றது.

ஆழிப்பேரலை மற்றும் ஏனைய பேரழிவுகளில் இறந்தவர்களை நினைவுகூரும் வகையில், தேசிய பாதுகாப்பு தினத்தன்று முற்பகல் 9.25 முதல் 9.27 வரை நாடு முழுவதும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.




### இலங்கைக்கான.. . தொடர்ச்சி ...

மறுகட்டமைப்பு மற்றும் மறுவாழ்வுக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப் படுத்தியதாகவும் அவர் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கடந்த செவ் வாய்க்கிழமை ஜெய்சங்கர் இலங்கையில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி தலைவர், வடக்கு கிழக்கு, மலையகத்தின் தமிழ் அரசியல்வாதிகள், ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### சந்திரனில் மின் ... தொடர்ச்சி ...

மையிலான சர்வதேச சந்திர ஆராய்ச்சி நிலையம் (ILRS) ஆகியவற்றிற்கு நீண்டகால எரிசக்தி விநியோகத்தை வழங்குவதாகும் என்று ரோஸ் கோஸ்மோஸ் புதன் கிழமை(24) அறிக்கையில் தெரி வித்துள்ளது.

என்பிஓ லாவோச்கின் சந்திரன் மற்றும் வெள்ளிக்கான சோவியத் பயணங்களுக்கு தலைமை தாங்கும் நிறுவனம், மேலும் ரஷ்யாவின் தற்போதைய சந்திர பயணங்களுக்கு முன்னணி நிறுவனமாக உள்ளார். மாநில அணுசக்தி நிறுவனமான ரோசாட்டம் மற்றும் அணு அறிவியலுக்கான நாட்டின் முன்னணி தேசிய ஆராய்ச்சி மையமான குர்ச்சடோவ் நிறுவனம் ஆகியவை இந்தத் திட்டத்தில் ஈடுபடும் என்று அது மேலும் கூறியுள்ளது.

அடுத்த தசாப்தத்தில், விண்கலத்தை உருவாக்கவும், தரை அடிப்படையிலான சோதனை சோதனைகளை நடத்தவும், விமான சோதனைகளை மேற்கொள்ளவும், சந்திரனில் உள்கட்டமைப்பை நிறுவவும் ரோஸ்கோஸ்மோஸ் திட்டமிட்டுள்ளது.

இந்த திட்டமிடப்பட்ட மின் நிலையம் சீனாவுடனான கூட்டு சந்திர திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும். மே மாதம் சீன அதிபர் ஜி ஜின்பிங் மாஸ்கோவிற்கு விஜயம் செய்தபோது, 2030களின் நடுப்பகுதியில் செய ல்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படும் பெய்ஜிங்கின் நிரந்தர சந்திர ஆராய்ச்சி தளத்திற்கு ஆற்றலை வழங்குவதற்காக சந்திரனில் ஒரு அணு மின் நிலையத்தை கட்டுவதற்கான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டன. அந்த முயற்சியில் ரஷ்யா ஒரு முக்கிய பங்காளியாக உள்ளது. ஆழமான விண்வெளி கட்டுமானங்கள் மற்றும் அணுசக்தியில் நிபுணத்துவத்தை அது வழங்கிவருகின்றது.

சந்திர ஆய்வு மீதான தீவிரமடைந்து வரும் போட்டியின் மத்தியில் இந்த அறிவிப்பு வந்துள்ளது. விண்வெளியில் சீனாவின் முக்கிய போட்டியாளரான அமெரிக்கா, ஆர்ட்டெமிஸ் திட்டத்தைத் தொடங்கியுள்ளது, இது விண்வெளி வீரர்களை சந்திரனுக்குத் திருப்பி அனுப்புவதையும், தென் துருவத்திற்கு அருகில் ஒரு நிலையான இருப்பை நிலைநிறுத்துவதையும், சந்திரனைச் சுற்றி வரும் ஒரு சிறிய விண்வெளி நிலையமான லூனார் கேட் வேயை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

### முல்லைத்தீவு ... தொடர்ச்சி ...

கூறியுள்ளார்.

இந்த விடயங்களைக் கேட்டறிந்த கரைதுரைப்பற்று பிரதேச செயலாளர் தமது பிரதேச செயலக பிரிவில் காணியற்றவர்கள் தொடர்பான தகவல்கள் திரட்டப் பட்டுள்ளதாகவும், அவர்களுக்கான காணி கச்சேரிக்கு விரைவில் அழைப்பு விடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த மக்களுக்கான காணிகள் ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**லயன் அறைகள்.. . தொடர்ச்சி ...**

இது குடும்ப உறவுகளுக்குள் விரிசல்களையும் சமூகச் சீர்கேடுகளையும் எதிர்காலத்தில் அதிகரிக்க வழிவகுக்கும். ஒரு சிறிய அறையில் சமையல், உறக்கம் மற்றும் ஏனைய வீட்டு வேலைகள் நடக்கும்போது, பிள்ளைகள் படிப்பதற்கான அமைதியான சூழல் அங்கு இருப்பதில்லை.

இது நீண்டகால அடிப்படையில் மலையக மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தைக் குறைத்து, அவர்களை மீண்டும் தோட்டத் தொழிலாளர்களாகவே முடக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது. லயன் குடியிருப்புகள் தோட்ட நிர்வாகத்திற்குச் சொந்தமானவை. மக்களுக்கு அதன் மீது காணி உரிமையோ அல்லது வீட்டின் மீது அதிகாரமோ இல்லை. எதிர்காலத்தில் ஒரு வங்கிக் கடனைப் பெறவோ அல்லது ஒரு சுயதொழிலைத் தொடங்கவோ தேவையான 'பிணை' அவர்களிடம் இருக்காது. இது அம் மக்களைத் தொடர்ச்சியான வறுமைச் சுழற்சிக்குள் தள்ளும். மலையகத்தில் மண்சரிவு அபாயம் அதிகம்.

லயன் குடியிருப்புகள் பெரும்பாலும் இவ்வாறான அபாய வலயங்களிலேயே உள்ளன. இது எதிர்காலத்தில் பாரிய மனித உயிர் இழப்புகளை ஏற்படுத்தக்கூடும். லயன் குடியிருப்புகள் என்பது வெறும் இடநெருக்கடி பிரச்சினை மட்டுமல்ல; அது ஒரு சமூகத்தின் பொருளாதார, கல்வி மற்றும் அரசியல் விடுதலையைத் தடுத்து நிறுத்தும் ஒரு சுவராகும். எதிர்காலத்தில் மலையக மக்கள் ஒரு கௌரவமான சமூகமாக வாழ வேண்டுமானால், லயன் அறைகளுக்குப் பதிலாக, காணி உரிமையுடன் கூடிய தனி வீடுகளும் 'புதிய கிராமியக் கட்டமைப்பும்' உருவாக்கப்படுவது அவசியமாகும்.

**வலியுறுத்தல் சார்ந்த அண்மைய நகர்வுகள்**

மலையகக் காணி உரிமைப் பிரச்சினையின் அண்மைய போக்குகள், தற்காலிகத் தீர்வுகளிலிருந்து விலகி, அரசியல் அங்கீகாரம், நிலப்பரப்பு சார் பாதுகாப்பு மற்றும் தமிழ் சமூகங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு ஆகியவற்றை நோக்கி நகர்கின்றன. முன்பு வெறும் "வீடு" மட்டுமே கோரிக்கையாக இருந்தது.


ஆனால் இப்போது, மலையகப் பகுதிகளைப் பெருந்தோட்ட நிர்வாகத்திடமிருந்து விடுவித்து, அவற்றை அரச நிர்வாகத்தின் கீழ் வரும் 'கிராமங்களாக' மாற்ற வேண்டும் என்ற போக்கு வலுப்பெற்றுள்ளது. இது நடந்தால் மட்டுமே மக்களுக்கு நிலத்தின் மீதான முழுமையான சட்ட உரித்து கிடைக்கும். "காணிகள் இல்லை" என்ற அரசாங்கத்தின் வாதத்தை மக்கள் இப்போது தகவல்களைக் கொண்டு எதிர்கொள்கின்றனர்.

காணிப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காவிட்டால், அவர்கள் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் குடியேறுவது குறித்து ஆலோசிக்கப்படும் என்ற மனோ கணேசனின் கருத்து மற்றும் அதற்கு எம்.ஏ. சுமந்திரன் விடுத்த பகிரங்க அழைப்பு, இலங்கைத் தமிழ் அரசியலில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியுள் ளது. இது மலையகப் பிரச்சினையை ஒரு பிராந்தியப் பிரச்சினையாகப் பார்க்காமல், ஒரு 'தேசிய இனத்தின் நில உரிமை' பிரச்சி னையாக மாற்றியுள்ளது.

மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் இருந்து மக்களை அப்புறப்படுத்துவது என்ற போர்வையில், அவர்களைத் தங்களின் பூர்வீக இடங்களிலிருந்து வேரோடு பிடுங்கி எறிவதற்கு எதிரான விழிப்புணர்வு மக்களிடையே அதிகரித்துள்ளது. மலையகத் தமிழர்கள் வருகை தந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் அவர்களின் நில உரிமைப் பிரச்சினை ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது வெறும் உள்நாட்டுப் பிரச்சினை மட்டுமல்ல, அடிப்படை மனித உரிமை மீறல் என்ற போக்கு சர்வதேச அளவில் உருவாகியுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் நீதிமன்ற வழக்குகள் மூலம், பெருந்தோட்ட நிறுவனங்கள் நிலத்தை எவ்வாறு கையாள்கின்றன என்பதை மக்கள் கேள்வி கேட்கத் தொடங்கியுள்ளனர். இது நிர்வாக ரீதியான அழுத்தத்தை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தியுள்ளது. அண்மைய போக்குகள் மலையக மக்களை வெறும் 'தோட்டத் தொழிலாளர்களாக' பார்க்காமல், 'நில உரிமையுள்ள பிரஜைகளாக' மாற்றுவதை நோக்கியே நகர்கின்றன. அரசாங்கமும் நிறுவனங்களும் நிலத்தை மூடி மறைக்க முடியாது என்பதைத் தரவுகள் நிரூபித்து வருவதால், காணி உரிமை என்பது இனி தவிர்க்க முடியாத ஒரு அரசியல் தீர்வாக மாறியுள்ளது. மலையக மக்களின் நில உரிமைப் போராட்டம் என்பது வெறும் மண் சார்ந்தது மட்டுமல்ல, அது அவர்களின் சுயமரியாதை, அரசியல் பலம் மற்றும் உயிர் பாதுகாப்பு சார்ந்தது. இருநூறு ஆண்டுகால உழைப்பிற்குப் பிரதிபலனாக அவர்களுக்குத் தேவைப்படுவது தற்காலிக வீடுகள் அல்ல. அவர்கள் பிறந்த மண்ணில் அவர்கள் காலூ ன்றி நிற்க ஒரு துண்டு நிலமும் அதற்கான கௌரவமான அங்கீகாரமுமே ஆகும்.

• • •




**2025ம் ஆண்டில்.. . தொடர்ச்சி ...**

மில்லியன்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கையான மக்கள் இடப்பெயர்வைச் சந்தித்துள்ளனர்.

நாட்டின் பெரும் பகுதியில் வாழும் மக்கள் பஞ்சம் பட்டினியை எதிர்நோக்கியுள்ளனர். மனிதநேய உதவிகளின் தேவைகளை இருக்கும் வளங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, மிகவும் அதிகமாகவே காணப்படுகிறது. எல் வாசர் என்ற இடத்தில் நடைபெற்ற சண்டை மிகவும் மோசமானதாக இருந்தது, டார்பூரில் இருந்த எஸ்ஏஎவ்வின் கோட்டை எனக்கணிக்கப்பட்ட இடத்தை 18 மாதகால முற்றுகைக்குப் பின்னர் ஆர்எஸ்எவ் கைப்பற்றியிருந்தது. இந்தப் போரில் கொல்லப்பட்ட மக்களின் உடல்களை விண்வெளியிலிருந்து கூடப்பார்க்கக்கூடியதாக இருந்தது, பேச்சுவார்தை மூலம் போருக்குத் தீர்வு காணும் வாய்ப்பு மிக அரிதாகவே காணப்படுகிறது. நாடு இரண்டாகப் பிளவுபடும் வாய்ப்பே அதிகமாகக் காணப்படுகிறது.

நன்றி; cfr.org
தொடரும்...

**முள்ளிவாய்க்கால் ... தொடர்ச்சி ...**

துணை செய்யும் படி தமிழ்நாட்டு அரசையும் மக்களையும் ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது. இந்தக் கோரிக்கைகளைத் தமிழீழத் தாயகமும் புலம்பெயர் தமிழர்களும் வலி யுறுத்தக் கேட்டுக் கொள்கிறோம்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்



